கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(15.03.2020 - 15 பங்குனி, 2020 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 10, கதிர் - 228, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2020

# ஞான ஒளி

ஞான ஒளி GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05




# உலகம் முழுவதும் பயங்கரமான சூழ்நிலைக்கு முகம் கொடுத்துக் கொண்டு இருக்கின்றது

## 2020ம் ஆண்டுக்கான சிறுவர் தினத்தின் போது பேராயர் அதிமேதகு, மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை



கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் கடந்த 7ம் திகதி தேவத்தை பெசிலிக்கா இலங்கை மாதா திருத்தலத்தில் 73வது சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது. அன்றைய திருப்பலி மறையுரையின்போது அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உரையாற்றுகையில்,

எமது நாடு மாத்திரமல்ல முழு உலகமும் பயங்கரமான நிலைக்கு முகம்கொடுத்துக்கொண்டிருக்கிறது. ஆரோக்கிய பிரச்சினை மாத்திரமல்ல, ஆன்மீகமும் குன்றி பயங்கரமான விளைவுகளுக்கு முகம்கொடுக்கின்றோம். எமது நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்க இருக்கும் சிறுவர் பரம்பரைக்கு தவறான வழியைக் காட்டி அழிவை நோக்கி கொண்டு செல்லும் மனிதபிமானமற்றவர்கள் மலிந்து காணப்படுகின்றனர்.

மேலும் ஆண்டகை தொடர்ந்து உரையாற்றுகையில், இச்சமூகத்தில் எம்மை அடிமையாக்க பல பாவ வழிகள் உண்டு. அவற்றில் கையடக்க தொலைபேசி, இணையத்தள ஊடகங்கள், போதைவஸ்து என்பன முன்னிலையில் உள்ளன. மனிதரிடையே வெளிப்படும் கொடூர குணம்; பொறாமை, வைராக்கியம், பேதங்கள், பழிவாங்குதல் போன்ற கெட்ட குணங்களுக்கு எமது பிள்ளைளை உட்படுத்தும் நச்சுத்தன்மைகொண்ட சமூகத்திலே நாம் வாழ்கிறோம்.

இறைவன் எமக்கு உன்னத வாழ்வைத் தந்து அதை வளர்க்க எமக்கு உதவுகின்றார். அந்த உதவியைப் பெற்று, பிள்ளைப் பருவத்திலிருந்தே எமது வாழ்வை பரிசுத்த வாழ்வாக மாற்றுவதே எமது பொறுப்பாகும்.

கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர்களும், மறைக்கல்வி இயக்குனர், அருட்பணி. லெஸ்டர் நோனிஸ் அடிகளார், தமிழ்ப்பிரிவு மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி. மனோகுமாரன் நாகரட்ணம், ஆங்கிலப்பிரிவு மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி. இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது. இதில் 20 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவ மாணவிகளும், ஆசிரியர்களும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகளும் கலந்து சிறப்பித்தனர்.

தகவல் : T. சுனில்

## இறைபதம் அடைந்தனர்



அருட்பணி. H.D. அந்தனி அடிகளார் 28.02.2020 அன்று இறைபதம் அடைந்தார். உஸ்ஸட்டகியாவ புனித மரியாள் ஆலயத்தில் இறுதி அஞ்சலிக்காக மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.



அருட்பணி. எரிக் பர்னாந்து அடிகளார் 10.03.2020 அன்று இறைபதம் அடைந்தார். அனுராதபுரம் புனித சூசையப்பர் பேராலயத்தில் வைக்கப்பட்டு 14.03.2020 அன்று காலை 10.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

**இவர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாற ஞான ஒளி பிரார்த்திக்கின்றது.**

## அருட்பணியாளர்கள் கௌரவிப்பு



கொழும்பு இறையியல் கல்லூரியின் பழைய மாணவர்களின் ஒன்று கூடலின்போது கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா திருப்பலி 07.03.2020 அன்று சிறப்புற நடைபெற்றது. இதன்போது யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் கலாநிதி மேதகு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில், காலி மறைமாவட்ட ஆயர் மேதகு. றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை, யாழ்ப்பாண மறைமாவட்ட...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## புனித வார நிகழ்வுகள்

குருத்து ஞாயிறு




சித்திரை 05

புனித வியாழன்



சித்திரை 09

புனித வெள்ளி



சித்திரை 10

உயிர்ப்பு ஞாயிறு



சித்திரை 12

**கொரோனோ தெற்றுநோயால் தாக்கப்பட்டு உள்ளவர்கள் மற்றும் அவர்களுக்கு சிகிச்சை வழங்கும் பணியாளர்களுக்காகவும், இந்நோய் பரவாமல் இருக்கவும் விசேட விதமாக இத்தவக்காலத்தில் செபிக்குமாறு திருத்தந்தை வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

## இரத்தினபுரி மறைமாவட்டம் யூபிலி விழா ஆரம்பம்.



**உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதீர், ஆண்டவர் குரலைக் கேட்டிடுவீர். (தி.பா 95)**



வத்தளை வட்டார திருப்பாலத்துவ சபை பொறுப்பாளரான புனித அன்னம்மாள் ஆலய உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. ஹசிந்த ரெக்சி அடிகளாரின் தலைமையின் கீழ் 04.02.2020 செவ்வாய்கிழமை தமிழ், சிங்கள ஊக்குவிப்பாளர்களின் வருடாந்த சுற்றுலாவில் பன்வில வியாகுலமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட உன்னத திருப்பலியையும் சுற்றுலாவில் பங்குபற்றிய சிங்களப்பிரிவு ஊக்குவிப்பாளர்களையும் நாயக்ககந்தை புனித காணிக்கை அன்னை ஆலய தமிழ்ப்பிரிவு ஊக்குவிப்பாளர்களான திருமதி. கோமதி ஜோன், திருமதி என்.பி. டயசையும் படத்தில் காணலாம்.

**தகவல் : திருமதி. ஜோன்**

## திரு. வெள்ளைச் சாமி செல்லத்துரை அவர்களின் 102வது பிறந்த நாள் கொண்டாட்டம்



மாதம்பிட்டிய கருணை இல்லத்தில் வாழும் திரு. வெ. அவர்கள் 2017ல் பங்குனி 24இல் இவ்வில்லம் வந்து சேர்ந்தார். திருமணமாகி 10 வருடம் மனைவியையும், சுனாமியின் சீற்றத்தில் தன்னுடைய உடன்பிறப்புக்களையும் இழந்த இவர், தன்னுடைய இறுதிக்காலத்தை செலவழிக்க இறைவனால் இவ்வில்லத்தில் கொண்டுவரப்பட்டார்.

செல்வத்துரை அவர்கள் தனது 99வது வயதில் இவ்வில்லம் வந்தார். வயத முதிர்ந்தவராயிருந்தாலும் அவரைப் பார்க்கின்றவர்கள் இவர் இவ்வளவு வாட்டசாட்டமாய் வல்ல செயல்கள் செய்கிறார். பாடுகிறார், செபிக்கிறார். தனது அனைத்து வேலையையும் செய்கிறார். மூன்று வேளையிலும் இவ்வில்லத்தில் சிற்றாலயத்தில் செபிக்கிறார். இந்துவாகவிருந்தும் இவர் கிறிஸ்தவ சிற்றாலயத்தில் பக்தியுடன் இருகரம் கூப்பி வேண்டுவார். எவருக்கும் எந்தப் பிரச்சினையும் கொடுக்காமல் செல்வத்துரை தனது அன்றாட வேலைகளை தானே செய்வார். வயது முதிர்ந்தவராயிருந்தும் தனது வாழ்க்கையின் இரகசியத்தை தனது இளமைப்பருவத்தை கூறும்போது 12 வயது - 95 வரை மட்டும் சைவ உணவை (மரக்கறியை) தனது உணவாகக் கொண்டதாக கூறுவார். அடுத்ததாக தனது வாழ்வில் எந்த கவலை, துன்பங்களையும் மனதில் இருத்தாது அதை ஒரு பொருட்டாக கருதாமல் அனைத்து சவால்களை ஏற்று வாழும் இவர் இன்று தனது 102வது (பங்குனி 5. 2020) பிறந்த நாளை கொண்டாடினார்.

அடைக்கலம் கொடுக்கும் இவ்வில்லத்தில் சேவை பாராட்டுதற்குரியது. திரு. செல்வத்துரை அவர்களின் வாழ்விற்காகவும், இவ்வில்லத்தின் சேவை மென்மேலும் வளர இறைவனை வேண்டி பிரார்த்திப்போம்.


**கார்மேல் அருட்சகோதரிகள், கருணை இல்லம்,**
**மாதம்பிட்டிய கொழும்பு 14**

> “எப்போதும் மறக்காமல் இருப்பது அன்பு அல்ல, என்ன நடந்தாலும் வெறுக்காமல் இருப்பது தான் உண்மையாக அன்பு”

# தங்கள் பெயர் கொண்ட திருவிழாவைக் கொண்டாடும் ஆயர்கள் – பங்குனி 19



ஆயர் மேதகு. மேரியஸ் ஜோசப் பீரிஸ் ஆண்டகை



ஆயர் மேதகு. இராயப்பு ஜோசப் ஆண்டகை



ஆயர் மேதகு. ஜோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை



ஆயர் மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகை

**தங்களின் பெயர் கொண்ட திருநாளைக் கொண்டாடும் ஆயர்களை ஞான ஒளி செபத்தினூடாக வாழ்த்துகின்றது.**

# “யூபிலி” விழா ஆயத்தம்

## இரத்தினபுரி மறைமாவட்டம்





காலி மறைமாவட்டத்திலிருந்த பிரிந்து 25 வருடம் பூர்த்தி யூபிலி விழா கொண்டாடுவதற்கான பல செயற்பாடுகள் ஒருங்கமைக்கப்பட்டுள்ளது. அதில் ஆரம்ப செயற்பாடாக கடந்த 28, 29ம் திகதிகளில் இரத்தினபுரி மறைமாவட்ட மேதகு கிளிட்டஸ் பெரேரா OSB ஆண்டகை, அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அனைத்து பங்கு இறைமக்களும் தலவில புனித அன்னம்மாள் ஆலயத்தை நோக்கிச் சென்று, அங்கு சிலுவைப்பாதை, திருமணித்தியாலம், நற்கருண ஆசீர்வாதம், விசேட திருப்பலி இடம்பெற்றது. கடந்த 5ம் திகதி இரத்தினபுரி பேராலயத்தில் ஒப்புரவு அருட்சாதனம், விசேட செபமும் ஆயர் ஆண்டகையின் தலைமையில் இடம்பெற்றது. இதனை இரத்தினபுரி மறைமாவட்ட அருட்தந்தையர்களே செய்தனர். முதலாவதாக இரத்தினபுரி பங்கில் நடைபெற்றது. தொடர்ந்து எல்லா பங்குகளிலும் நடைபெறவுள்ளன.

**மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம்,**
**இரத்தினபுரி.**

# உறுதிபூசுதல் நிகழ்வு – 2020



வெள்ளவத்தை புனித லோறன்ஸ் ஆலயத்தில் 22.02.2020 அன்று உறுதிபூசுதல் நிகழ்வு நடைபெற்றது. அன்றைய தினம் காலை 8.00 மணி திருப்பலியில் கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது. உறுதிபூசுதல் பெற்றுக்கொண்ட 42 மாணவர்களையும், மறையாசிரியர்கள், பங்குத்தந்தை கிளமன்ட் ரொசாய்ரோ அடிகளார் மற்றும் உதவிப்பங்குத்தந்தை ரவீந்திர பீரிஸ் அடிகளாரையும் படத்தில் காணலாம்.

**தகவல் : மைக்கல் பர்னாந்து.**

**அறிவை முதலீடாக வைத்தால் அரண்மனையைக் கூட வாங்கலாம். ஆசையை முதலீடாக வைத்தால் துன்பத்தைத் தான் வாங்க முடியும்**

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
15 பங்குனி, 2020 ஞாயிற்றுக்கிழமை.

# "தூய யோசேப்பு மனித நேயம் கலந்த நேர்மையாளர்"

தேன்கூட்டில் இருக்கும் தேன் இனிமையானது. இதுபோன்று நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைகளும் எப்போதும் பிறருக்கு மகிழ்ச்சியையும் மனமாற்றத்தையும் தரவேண்டும். தவக்காலத்தின் மூன்றாம் வாரத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கின்றோம். தவக்காலத்தின் சிறப்பே மனமாற்றமாகும். மனந்திரும்பாவிடில் அழிவீர்கள் என்று எச்சரிக்கும் இயேசு மனந்திரும்ப இறைவன் மீண்டுமாக தரும் சந்தர்ப்பமே தவக்காலம் ஆகும். இதை நாம் காய்க்காத அத்திமரம் கதையினூடாக பார்க்கின்றோம். இறைவன் மனிதனின் அழிவை விரும்பாதவர். அவன் வாழ்வு பெற வேண்டும் என்று எண்ணுபவர். ஆனாலும் மனிதன் தவறுகளும் பிழைகளும் புரிந்திடும்போதெல்லாம் உடனடியாக தண்டிக்க மாட்டார். காலந்தாழ்த்துபவர். பொறுமை காப்பவர். இதற்காக பல வழிகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி தந்து நாம் மனமாறும்வரையில் ஆசையோடு காத்திருப்பவர். உள்ளார்ந்த நேர்மையான மனமாற்றம் கடவுளின் மனத்தையே மாற்றிச் செயற்பட வைக்கும் என்பதை திருவிவிலியத்தில் நினிவே நகர மனமாற்றம், இறைவாக்கினர் எரேமியாவிற்கு அளிக்கப்பட்ட இறைவாக்கு மற்றும் சிலை வழிபாட்டில் இன்பம் கண்ட இஸ்ரயேலருக்கு பரிந்துரை செய்த மோசேயின் வேண்டுதல் என பல நிகழ்வுகளைக் காண்கின்றோம். ஆக நல்ல மனிதர்களாக, மனிதத்துவம் நிறைந்தவர்களாக வாழ்வதற்கு இத்தவக்காலத்தைப் பயன்படுத்தி மனமாற்றம் பெறுவது அவசியமானதாகும்.


இம்மாதம் 19ம் திகதி விசேடமாக தூய யோசேப்பை திருச்சபையானது நினைவுகூர்கின்றது. இவர் மனித நேயம் கலந்த நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்ந்த நேர்மையாளர். இவரது நம்பிக்கையானது எல்லைக் கடந்த சோதனைக்கு ஆளானது. நம்பிக்கைக்கு எதிராக நம்பியவர். தூயவர்கள் என்போர் சிக்கல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் அப்பாற்பட்டவர்கள் அல்லர். மாறாக அவர்களும் சிக்கல்களை, பிரச்சினைகளை, சோதனைகள் இவைகளுக்கு முகங்கொடுத்து வாழ்ந்தவர்கள். இவரது வாழ்க்கை என்றும் மலர்ப் படுக்கையாக இருந்ததில்லை. மரியா கருவுற்ற செய்தி கேட்டு எவ்வளவுப் பெரிய அதிர்ச்சிக்கும் மனக்குழப்பத்திற்கும் ஆளானவர். இறைத்திட்டத்தை நிறைவேற்றுவது அல்ல மாறாக இறை விருப்பத்தைவிட மேலானது இவ்வுலகில் வேறொன்றில்லை என உணர்ந்தவர். அதேபோன்று

பரிசுத்த திருச்சபையானது இம்மாதம் 25ம் திகதி கபிரியேல் வானதூதர் மரியன்னைக்கு மங்கள வார்த்தை கூறியதை நினைவுகூர்கின்றது. "அருள் மிகப் பெற்றவரே வாழ்க" வானதூதர் வழியாக மரியன்னைக்கு சொல்லப்பட்ட முதல் வார்த்தை இதுதான். மரியாவின் சிறப்புமிக்க செயற்பாடுகள் அனைத்திற்கும் மூலக்காரணம் கடவுளின் அன்பும் பரிவிரக்கமும் என்பதை இவ்வாழ்த்து எடுத்துக் கூறுகின்றது. இறைமகனுக்கு தாயாகும் பேற்றினைப் மரியா பெற்றது தனது தகுதி மற்றும் உரிமையினாலோ அல்ல. மாறாக இறைவனின் பேரன்பினால் ஆகும். நமது வாழ்விலும்கூட நாம் சந்திக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளும் ஏதோ ஒரு விதத்தில் இறைவனின் அன்பையும் ஆற்றலையும் சுமந்து வருகின்றது என்பதை நாம் உணர வேண்டும். இறைவனின் உடனிருப்பு எப்போதும் எம்மோடு கூடவே இருக்கின்றது என்பதை நாம் முழுமையாக நம்புவோம். இத்தவக்காலத்தை நல்லதொரு சந்தர்ப்பமாக பயன்படுத்தி முழுமையாக எம்மை இறைவனுக்கு கொடுப்போம். நாம் இடமளிக்காத வரையில் மனமாற்றமும் நிகழாது. தவக்காலமும் பொருள் தராது.

இறையாசீருடன் ஆசிரியர்

வத்திக்கானிலிருந்து
திருத்தந்தை

# "ஆண்டவரே, உமக்குத் திருவுளமானால்...."



நம் ஒவ்வொருவர் உதடுகளிலும் அவ்வப்போது இருக்க வேண்டிய செபம் "ஆண்டவரே உமக்குத் திருவுளமானால் இதைச் எனக்குச் செய்யும், அதை எனக்குத் தாரும் என்ற செபமே" என்று திருத்தந்தை கூறியுள்ளார். "இந்த எளிய செபம் "உமக்குத் திருவுளமானால்...." என்ற வார்த்தைகள் கடவுளின் பார்வையை நம் பக்கமாக ஈர்க்கும் வார்த்தைகள். ஒருபுறம் இவை கடவுளுக்கு நாம் கொடுக்கும் சவால்! மறுபுறம், இவை கடவுள்மீது நாம் கொண்ட நம்பிக்கையின் வெளிப்பாடு. "அவரால் இதை செய்ய முடியும் என்று எனக்குத் தெரியும். ஆகவே, அவரிடம் என்னையே ஒப்படைக்கப் போகிறேன்" என்று கூறும் விதத்தில் இந்த வார்த்தைகள் அமைந்துள்ளன.

அந்தத் தொழுநோயாளர் இந்த எளிய செபத்தைக் கூறியதன் காரணம் அவர் இயேசு நடந்துகொண்ட விதத்தை பார்த்திருந்தார். இயேசுவின் பரிவைப் பார்த்திருந்தார். பரிவு என்பது பரிதாப்படுவதில் இல்லை, மாறாக, பரிவு எட்டி நின்று பார்த்துக் கொண்டிருக்காது. இதயத்திலிருந்து எழும் இந்த உணர்வு ஏதாவது செய்ய நம்மைக் கட்டாயப்படுத்தும், பரிவு என்பது துன்பம் அனுபவிப்பவர்களோடு நாமும் சேர்ந்து அந்தத் துன்பத்தை அனுபவிப்பது. மற்றவர்களுடைய துன்பத்தை நம்மீது சுமந்து கொண்டு, அதன்வழி அதைத் தீர்க்க, அவர்களை விடுவிக்க முயல்வது. இதுவே கிறிஸ்துவின் பணி. அவர் வெறுமனே சட்டத்தைப் போதித்து விட்டு திரும்பிச் செல்ல மட்டும் வரவில்லை. மாறாக அவர் பரிவு கொண்டு வந்தார். நம்மோடு நமக்காகப் பாடுபட வந்தார். தம் உயிரையும் நமக்காக அளிக்க வந்தார். இயேசு நம்மீது கொண்ட பெரும் அன்பு அவரை சிலுவைக்கு இட்டுச் சென்றது.

ஆகவே, நம்முடைய இன்னல்களில் இந்த எளிய செபத்தை பயன்படுத்துவோம். அவர் தம்மை நம் இன்னல்களோடு இணைத்துக் கொள்ளக்கூடியவர், ஆகவே "ஆண்டவரே, உமக்குத் திருவுளமானால் என்னைக் குணப்படுத்தலாம்" என்று சொல்வோம். "ஆண்டவரே, உமக்குத் திருவுளமானால் என்னை மன்னிக்கலாம்" என்று சொல்வோம். "ஆண்டவரே, உமக்குத் திருவுளமானால் எனக்கு உதவலாம்" என்று சொல்வோம். சற்று விரிவாகச் சொல்ல விரும்பினால், "ஆண்டவரே, நான் பாவி. எனக்கு இரக்கம் காட்டியருளும். பரிவு காட்டியருளும்" என்று சொல்வோம். ஒவ்வொரு நாளும் பலமுறை நாம் சொல்லக்கூடிய எளிய செபம் இது. மௌனமாக, இதயத்தின் ஆழத்திலிருந்து பலமுறை கூற வேண்டிய செபம்.

"நான் ஒரு பாவி ஆயிற்றே, நான் எப்படி இந்த செபத்தை சொல்ல முடியும்?" எனத் தயங்கத் தேவையில்லை. பாவிகள் தான் இதை அதிகமாகச் சொல்ல வேண்டும். அவர் பாவிகளைக் குறித்து வெட்கப்படுவதில்லை. அவர் பாவிகளாகிய நமக்காகவே வந்தார். யார் தம்மையே மிகப்பெரிய பாவி எனக் கருதுகிறார்களோ, அவர்களோடு ஆண்டவர் இன்னும் நெருங்கி இருக்கின்றார். ஆகவே இந்த எளிய செபத்தை சொல்லும் பழக்கத்தை நமதாக்கிக் கொள்வோம். அவர் நம்முடைய சங்கடங்களையும், பாவங்களையும் உள்ளார்ந்த நோய்களையும், அனைத்தையும் தம்மீது சுமந்து கொள்வார்" என்று கூறும் திருத்தந்தை, இந்த விதத்தில் ஆண்டவருடைய அன்பையும், பரிவையும் உணர்ந்து வாழ நம்மை அழைக்கின்றார் இந்த தவக்காலத்தில்.

> "ஆண்டவரே, உமக்குத் திருவுளமானால் எனக்கு உதவலாம்" என்று சொல்வோம். சற்று விரிவாகச் சொல்ல விரும்பினால், "ஆண்டவரே, நான் பாவி. எனக்கு இரக்கம் காட்டியருளும். பரிவு காட்டியருளும்" என்று சொல்வோம். ஒவ்வொரு நாளும் பலமுறை நாம் சொல்லக்கூடிய எளிய செபம் இது.

## உண்மை உறைக்கும்

கமிலஸ்

உன் சிலுவையை சுமந்துக்கொண்டு இறைவனிடம் வா



அருட்பணி அந்திரியாஸ் பர்னாந்து O.M.I

# புது வாழ்வு

தொடக்கக் கால எருசலேம் வழிபாடு காலந்தொட்டு பல நூற்றாண்டுகளாக திருச்சபை புனித யோவான் நற்செய்தியின் சில கதைகளை தேர்ந்தெடுத்து அவற்றை தவக்காலத்தில் பயன்படுத்தின. இன்னும் அத்தகைய மூன்று நற்செய்தி பகுதிகள் தவக்காலத்தில் முதல் வருடத்தில் மூன்றாம், நான்காம், ஐந்தாம் வாரங்களில் பயன்படுத்தப்படுகின்றன. முறையே சமாரியப் பெண்ணொருவரை சந்தித்தல், பிறவியிலேயே பார்வை அற்றவர் பார்வை பெறுதல், இலாசர் மீண்டும் உயிர்பெறுதல், இம் மூன்று நற்செய்தி பகுதிகளும் இரண்டாம் வருடத்திலும், மூன்றாம் வருடத்திலும் கூட பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது.

ஏன் அத்தகையதொரு சிறப்பு இம்மூன்று நற்செய்தி பகுதிகளுக்கு? தொடக்க திருச்சபை காலத்திலிருந்து திருமுழுக்கு பெற ஆயத்தம் செய்யும் காலமிது. எனவே இம்மூன்று நற்செய்தி பாடங்களும் திருமுழுக்கு பெற ஆயத்தம் செய்வோருக்கும், திருமுழுக்கு பெற்றோர்க்கும் நிறைய பாடங்களை சொல்லித் தருகிறபடியால் இத்தகைய ஓர் சிறப்பு இம் மூன்று பாடங்களிலும் மூன்று அடையாளங்கள் உண்டு. தண்ணீர், ஒளி, புதிய வாழ்வு இவை மூன்றும் திருமுழுக்கோடு தொடர்புடையது.

## 1. சமாரியப் பெண்ணை இயேசு கிணற்றடியில் சந்தித்தல் (புனித யோவா 4:1-42)

அசீரியப் படை எடுப்பில் விளைவாக யூதர்களின் ஒரு பகுதியினர் கலப்புத் திருமணங்கள் செய்து



கலப்பினமாகி விட்டனர். இதன் காரணமாக மற்ற யூதர்கள் கலப்புத் திருமணம் செய்து கொண்ட யூதர்களை தூய்மையற்றவர்கள் என்று சொல்லி சமாரியர்கள் என்று அழைத்தனர். இந்த சமாரியர்களில் ஒரு பெண்ணை இயேசு கிணற்றடியில் சந்திக்கின்றார். இயேசு சமாரியப் பெண்ணை படிப்படியாக பல நிலைகளைக் கடந்து பயணம் செய்ய வைக்கின்றார்.

அ) யூதர்கள் சமாரியரையும், சமாரியர் யூதர்களையும் வெறுத்தனர். நண்பகல் வேளை இயேசு பயணத்தின் களைப்பினால் தண்ணீர் கேட்கின்றார். சமாரியப் பெண்ணுக்கோ வியப்பு. ஒரு ரபி பொது இடங்களில் தன் சொந்த மனைவியோடு கூடப் பேசுவதில்லை. எனவே இப்பெண் இயேசுவிடம் நீர் யூதர், நானோ சமாரியப் பெண். நீர் என்னிடம் குடிக்க தண்ணீர் கேட்பது எப்படி? என்று கேட்கிறார். முதல் நிலையில் இயேசுவை ஓர் வெறும் யூதராக காண்கின்றாள்.

ஆ) குடிக்கத்தண்ணீர் கொடும் எனக் கேட்பவர் யார் என்பதை அறிந்திருந்தால், நீரே அவரிடம் கேட்டு இருப்பீர். அவரும் உமக்கு வாழ்வு தரும் தண்ணீரைக் கொடுத்திருப்பார். என்றார். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது. அத்தகைய தண்ணீரை தனக்கு தரும்படி இப்பெண் கேட்கின்றாள். இயேசு ஓர் வித்தியாசமான மனிதர் என்பதை உணர்கின்றார். இயேசுவை ஐயா என்று அழைக்கின்றார். இது இரண்டாம் நிலை.

இ) இவ்வளவு நேரமும் இயேசுவும் அப்பெண்ணும் இருவேறுபட்ட தளங்களில் இருப்பதைக் காண்கின்றோம். இயேசு ஆன்மீக தளத்திலும் இப்பெண் உலகியல் தளத்திலும் இருக்கின்றனர். இயேசு அவருடைய தனிப்பட்ட வாழ்வுக்குள் ஊடுறுவுகின்றார். அவருடைய வாழ்வின் யதார்த்தத்தை புரிய வைக்கின்றார். இப்பொழுது இப்பெண் இயேசுவை நோக்கி ஐயா நீர் ஓர் இறைவாக்கினர் என்பதை புரிந்து கொண்டேன் என்கிறார். இது மூன்றாம் நிலை.

ஈ) இறுதி நிலையிலே இயேசுவினுடைய உண்மை இயல்பை உணர்ந்து கொள்கிறாள். இயேசுவை மெசியாவாக இனங்கண்டு கொள்கிறாள். உடனடியாக குடத்தை விட்டுவிட்டு ஊருக்குள் போகின்றாள். மற்றவர்களுக்கு இயேசுவை அறிவிக்கின்றார். மற்றவர்களை இயேசுவிடம் அழைத்து வருகின்றார். தண்ணீர் மொள்ள வந்த பெண் இயேசுவை வெறும் யூதனாக கண்டவர், ஈற்றில் அவரை மெசியாவாக அனுபவிக்கின்றார். திருமுழுக்கு பெறவிருப்பவர் இப்படியான பல படிகளைக் கடந்து இயேசுவை மெசியாவாக நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்வதாகும்.

## 2) பிறவியிலேயே பார்வை அற்றவர் பார்வை பெறுதல் (புனித யோ 9:1:41)

இந்நிகழ்வு பின்வருமாறு அமைகிறது. இயேசு பார்வை அற்றவரை அணுகுகிறார். அவர் தரையில் உமிழ்ந்து, உமிழ் நீரால் சேறு உண்டாக்கி அச்சேற்றைப் பார்வை அற்றவருடைய கண்களில் பூசி, சீலோவாம் குளத்தில் கண்களை கழுவச் சொல்கிறார். அவர் பார்வை பெற்று திரும்பி வருகிறார். தொடக்க கால கிறிஸ்தவ சமூகம் இந்நற்செய்தி பாடத்தின் வழியாக, தங்கள் மனமாற்றத்திற்கான படிநிலைகளை உள்வாங்கிக்கொண்டது. திருமுழுக்கு பார்வை பெறுதல் அதாவது ஒளியேற்றுப் பெறல் அல்லது ஒளி பெறுதல் என்ற புரிதலை கொண்டிருந்தனர். இந்த நிகழ்விலும் நான்கு படிநிலைகளைக் காண்கின்றோம்.

அ) அவரைசூழ இருந்த அக்கம் பக்கத்தார் நீர் எவ்வாறு பார்வை வெற்றீர்? என்ற வினா எழுப்புதல் இயேசு எனப்படும் மனிதர் சேறு உண்டாக்கி, என் கண்களில் பூசி, சீலோவாம் குளத்திற்குப் போய், கண்களைக் கழுவும் என்றார். கழுவினேன். பார்வை கிடைத்தது என்றார்.

ஆ) பார்வை பெற்றவர் பரிசேயரிடம் அழைத்து வரப்படல். விசாரிக்கப்படல், ஓய்வு நாளில்




இதனை செய்தவர், கடவுளிடம்இருந்து வந்தவர் அல்ல. என்பது பரிசேயரின் வாதம் பாவியான ஒரு மனிதரால்இத்தனைய அரும்அடையாளங்களை செய்ய இயலுமா? இது இன்னொரு சாராரின் வாதம். ஆனால் பார்வை பெற்றவர், அவர் ஓர் இறைவாக்கினர்?என்கின்றார்.

இ) பார்வை பெற்ற மனிதரின் பெற்றோரிடம் விசாரணையை தொடர்ந்து, இரண்டாவது தடவையாக பார்வை பெற்றவரிடம் விசாரணையின் முடிவில் இவர் இயேசுவை, கடவுளிடம் இருந்து வந்தவர் என்றார். யூதர்கள் அவரை வெளியே தள்ளி விடுகின்றனர்.

ஈ) வெளியே தள்ளப்பட்டதைக் கேள்வியுற்ற இயேசு அவரைக் காண்கிறார். வெளிப்படையாகவே மானிட மகனிடம் நீர் நம்பிக்கை கொள்கிறீரா? என்று கேட்க, ஆண்டவரே நம்பிக்கை கொள்கின்றேன் என்று பதில் அளித்தார்.

தொடக்க திருச்சபையில் இந்த நம்பிக்கை அறிக்கை இது ஓர் அனுபவ அறிக்கை. திருமுழுக்கில் அடிப்படை கிறிஸ்துவை நம்புதல்

## 3. இலாசர் உயிர் பெறுதல் (புனித யோவா 11:1-44)



மேலே கண்ட இரண்டு பாடங்களிலும் நம்பிக்கை வாழ்வின் இருவேறு பகுதிகளை காண்கின் றோம். பெண் நம்பிக்கை வாழ்வின் ஆரம்பம். பார்வை பெற்றவர் ஒரு படி மேலே சென்று இயேசுவை ஆண்டவரே நம்பிக்கை கொள்கின்றேன் என்ற உறுதியான நம்பிக்கை அறிக்கை. இறுதியாக இலாசர் நிகழ்வு இறப்பு அனுபவம் வழியாக ஆழமாக்கப்பட்ட நம்பிக்கை வாழ்வு.

இதுவே திருமுழுக்கிற்கான ஆயத்தத்திற்கான இறுதி நற்செய்தி பாடம். புதுவாழ்வு திருமுழுக்கினால் ஒருவர் பெறும் புதுவாழ்வை குறித்து நிற்கின்றது. இந்நற்செய்தி பாடம் வழியாக யோவான் சீடர்களுக்கும் மார்த்தா, மரியா மற்றும் நமக்கும் இலாசரின் இறப்பைப் பற்றிய புரிதலை ஏற்படுத்த முனைகின்றார். மார்த்தா, மரியா, இலாசர் இயேசுவின் நண்பர்கள். ஆனால் நண்பரின் இறப்பு செய்தியை கேள்வியுற்ற இயேசு செயல்படும் விதம் புரிந்து கொள்ள கடினமாக உள்ளது. மார்த்தா இயேசு மெசியா மானிடமகன் என்பதை, இலாசர் இறுதி நாளில் உயிர்ப்பில் பங்கேற்பார் என்று நம்புகிறார். ஆனால் இயேசு தங்களோடு இருந்திருந்தால் தன் சகோதரன் இறந்திருக்க மாட்டார் என்றாள். இயேசுவுக்கு இலாசரை மீண்டும் வாழ்வுக்கு கொண்டு வர முடியும். ஆனால் இயேசு வந்தது அதற்காக அல்ல. மாறாக சாவினால் ஆட்கொள்ள முடியாத நிலைவாழ்வை தருவார் என்பதே. இலாசர் உயிர்பெறுவார், ஆனால் மீண்டும் இறப்பார். இயேசுவும் உயிர்ப்பார் ஆனால் மீண்டும் இறக்க மாட்டார். அவரில் நம்பிக்கை கொண்டு வாழ்பவர்களுக்கும் இது உரித்தாகும்.

இறப்பு எல்லாரையும் ஏதோ ஓர் விதத்தில் பயப்படுத்துவது உண்டு. எவ்வளவு நம்பிக்கை இருந்தாலும் இறுதி நேரத்தல் ஒரு வித பயம் நம்மை ஆட்கொண்டு விடுகிறது. தனிமை உணர்வு, எனது செல்வம், செல்வாக்கு, புகழ் அனுபவித்த வசதிகள் எதுவுமே தொடரப் போவதில்லை. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழா விடில் எங்கள் நம்பிக்கை வீண். புனித பவுலின் வார்த்தையின்படி சாவே கடைசிப் பகைவன் அதுவும் அழிக்கப்படும். வாழ்வு, உயிர்ப்பும், உயிரும் இயேசுவே. என்னில் நம்பிக்கை கொள்ளும் எவரும் ஒருபொழுதும் இறப்பதில்லை திருமுழுக்கில் கழுவப்படுகிறோம். ஒளி பெறுகிறோம். புதுவாழ்வை அடைகின்றோம் என்பதை மனதில் இருத்துவோம்.

நாம் தவக்காலத்தை 'நீ மண்ணிற்கே திருமபுவாய் என்று சாம்பல் பூசி ஆரம்பித்தோம். புதுவாழ்வு உண்டு என்ற நம்பிக்கையோடு உயிர்ப்பு விழாவைக் கொண்டாடுவோமாக.

# புனித சூசையப்பர் இயேசு கிறிஸ்துவின் வளர்ப்புத் தந்தை

புனிதர்களில் புனித கன்னி மரியாவுக்கு அடுத்ததாக புனித சூசையப்பர் வணங்கப்படுகின்றார். கிறிஸ்தவ வரலாற்றில் தொடக்க காலம் முதலே இவர் புனிதராக போற்றப்படுகிறார். இவர் கிறிஸ்தவர்களால் சிறப்பாக கத்தோலிக்கர் மற்றும் கிழக்கு மரபு வழித்திருச்சபையினரால் மிகவும் மதிக்கப்படுகிறார்.

புனித சூசையப்பர் அகில உலக திருச்சபை, கற்பு, கல்வி, திருமணம், குடும்பங்கள், நல்ல மரணம் ஆகியவற்றுக்கும், தொழிலாளர்களுக்கும் பாதுகாவலராக விளங்குகின்றார்.

கத்தோலிக்க திருச்சபையில் இவருக்கு இரண்டு விழாக்கள் சிறப்பிக்கப்படுகின்றன. அவை

1. புனித சூசையப்பர் கன்னி மரியாவின் கணவர். பங்குனி 19ம் திகதி
2. புனித சூசையப்பர் தொழிலாளர்களின் பாதுகாவலர் வைகாசி 1ம் திகதி.

புனித சூசையப்பர் தாவீது அரசரின் வழிமரபிலே தோன்றியவர். இவரது தந்தையின் பெயர் ஏலி என்கின்ற யாக்கோபு ஆகும். நாசரேத்தில் வாழ்ந்து வந்த சூசையப்பர் தச்சுத் தொழில் செய்து வந்தார். தாவீது குலத்து கன்னிப் பெண்ணான மரியாவுடன் இவருக்கு திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டது. அவ்வேளையில் மரியா தூய ஆவியின் வல்லமையால் இறைமகனை கருத்தாங்கும் பேறுபெற்றார். மரியா திடீரென கருவுற்றதால் சூசையப்பர் குழப்பம் அடைந்தார். நேர்மையாளரான இவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்காமல் மறைவாக விலக்கிவிட நினைத்தார். மரியா கடவுளின் திருவுளத்தால் இறைமகனை கருத்தாங்கி இருப்பதை வானதூதர் வழியாக அறிந்த இவர் மரியாவை ஏற்றுக்கொண்டார்.

இயேசு பெத்லேகம் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த வேளையிலும், அவரைக் கோயிலில் ஒப்புக்கொடுக்க எருசலேம் சென்ற நேரத்திலும், ஏரோது அரசன் அவரைக் கொல்லத் தேடியபோதும் மரியாவையும், குழந்தை இயேசுவையும் மிகுந்த அன்புடனும், அக்கறையுடனும் சூசையப்பர் பாதுகாத்தார். பன்னிரண்டு வயதில் இயேசு எருசலேம் கோவிலில் தங்கிவிட்ட பொழுது சூசையப்பர்



மிகுந்த கவலையுடன் தேடி அலைந்து அவரைக் கண்டு பிடித்தார். தச்சுத் தொழிலில் வந்த வருமானம் மூலம் குடும்பத்தைக் காப்பாற்றினார். மரியாவும் நெசவுத் தொழில் மூலம் இவருக்கு உதவினார்.

சூசையப்பர் இயேசுவுக்கு தச்சுத் தொழிலைக் கற்றுக் கொடுத்தார். மரியாவுக்கு நல்ல கணவராகவும், இயேசுவுக்கு நல்ல தந்தையாகவும் விளங்கினார். சிறந்த வாய்மையும் பொறுமையும் சூசையப்பர் திருகுடும்பத்தை சிறப்பாகத் தலைமை தாங்கி வழிநடத்தினார். இயேசு தனது இறையரசுப் பணியைத் தொடங்குவதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு, இயேசுவும் மரியாவும் அருகில் இருக்க சூசையப்பர் பாக்கியமான மரணம் அடைந்தார். (மத் 1:18-21, 24-25, மத் 2:13-14, 9-21, மத் 13:54-56, லூக் 2:4-7, லூக் 2: 21-22, 41-46) நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**“எங்கள் காவலாம் சூசை தந்தையின் மங்களங்கள் இன்று சொல்லி, என்றும் பாடுவோம்”**

**புனித சூசையப்பரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

**ஆக்கம் : அருட்சகோதரி. மார்கிரட்**
**நல்லாயன் கன்னியர் சபை**

## தாய் மொழி




ஆண்டுகள் பல கடந்தும்
வாழ்ந்து காட்டும்
மொழி......
பெருமை பெற்ற எம்
மொழி.....
எம் செம்மொழி......
எம் தாய் மொழி
அதுவே எம்
தமிழ் மொழி.......
இன்பத்தமிழ் மொழி.....

இயல் - இசை -
நாடகமாய்,
ஈடிணையற்ற
இனிமை சொரியும்
கற்பக தருவாம்
கனிவான மொழியாம்
எம் தாய் மொழி.....
அதுவே எம்
தமிழ் மொழி என்று
வாழ்த்துவோம் வாரீர்

பழமை வாய்ந்த
மொழியாம்.....
பலரும் வாழ்த்தும்
மொழியாம்.....
பலம் வாய்ந்த
மொழியாம்.....
எம் தமிழ் மொழியின்
இனிமை அறிய வாரீர்
அதன் செழுமை காண
வாரீர்......
அதன் முழுமை காண
வாரீர்......

இன்பத்தமிழே இனி
எங்கள் பேச்சு என்று
அறிவீர் - அதுவே
எங்கள் உயிர் மூச்சு
என்று முழு உலகிற்கும்
முழங்க வாரீர்.....
தமிழின் பெருமையை
வாரி வழங்க வாரீர்.....

**பென்ஜமின்**
**சோமநாதர்.**

# வெற்றியின் திறவுகோல் வாசிப்பு



மொழிகள் உருவான காலத்திலிருந்தே வாசிப்பு பழக்கமும் உருவாகியது. ஆரம்ப காலத்திலிருந்தே பல்வேறு மொழிகள் உருவாகின. இவையணைத்தும் வாசிப்பின் மூலம் அறியப்பட்டதே. வாசிப்பு மனிதனை பூரணமாக்குகிறது. வாசிப்பின் மூலம் பல நன்மைகளைப் பெறுகின்றோம். மொழித்திறன் விருத்தி, அறிவு, சொல்லாட்சி, புரிந்துணர்வு என்பன விருந்தியடைகின்றது. வாசிப்பு பழக்கம் இல்லாதவர்களே பயம், கோபம், புரிந்துணர்வின்றி செயற்படுவார்கள்.

வாசிப்பின் மூலம் பல திறன்களைப் பெறமுடியும். அதாவது சிந்திக்கும் ஆற்றல், ஆராய்ந்து அறியும் ஆற்றல், காரணம் கண்டறிதல், கற்பனை செய்யும் ஆற்றல், நியாயமாக நடந்து கொள்ளும் தன்மை என்பன உள்ளடக்கப்படும். அன்றாட வாழ்க்கையில் சந்தோஷத்துக்காக சிறுகதை புத்தகங்களையும், பொழுதுபோக்கிற்காக மற்றும் ஓய்வு நேரங்களை பயனுள்ளதாக கழிப்பதற்கும் புத்தகங்களை வாசிக்கின்றோம். ஆகவே ஒரு பிள்ளை வாசிப்பில் ஆர்வம் காட்ட பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் உதவ முடியும்.

ஆனால் ஒரு தாயினால் இதில் பெரும் பங்களிப்பினை வழங்கமுடியும். அதாவது ஒரு கருவுற்ற தாயானவள் பல நல்ல நூல்களைத் தேடி வாசிப்பதன் மூலம் பிள்ளையுடைய மூளை விருத்தி சிறப்பாக நடைபெறும் என்பது பல அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்களின் கருத்தாகும். வாசிப்பு என்பது ஒரு மகிழ்ச்சிகரமானதும் சுவாரஸ்யமானதுமான செயற்பாடாகும். பொதுவாக வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி அறியாதவர்கள் வாசிப்பு என்பது எரிச்சலூட்டும் அல்லது நேரத்தை வீணடிக்கும் விடயம் என எண்ணுகின்றனர்.

வாசிப்பானது பலரது வெற்றிக்கு பங்களிப்பு செய்துள்ளது. மற்றும் பல ஆய்வாளர்கள். அறிஞர்கள், புத்தாக்கம் புனைபவர்களை உருவாக்கியுள்ளது என அறியாது இருக்கின்றனர். தற்போதைய உலகில் அதிகளவு மக்கள் வாசிப்பில் ஈடுபடுகின்றனரா? என்பது கேள்விகுறியாக இருக்கின்றது...

“வாசிப்பு ஒரு மனிதனை பூரணமாக்குகிறது” எனும் கருத்து உண்மையானதே. ஏனெனில் அறியாத விடயங்களை தேடி வாசித்து அறிந்து கொள்வதன் மூலம் ஒரு மனிதன் பூரணமடைகிறான் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. “ஒரு சிறந்த வாசிப்பாளன் தான் ஒரு சிறந்த எழுத்தாளன்”.... அதிகமாக வாசிப்பில் ஈடுபடுவதன் மூலம் அவர்களின் படைப்பாற்றலும் கூட வளர்ச்சியடைகிறது... பொது அறிவு வளர்ச்சியும், ஏனையவர்களில் கலாசாரம், பாரம்பரியம், நடைமுறைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை அறியும் வாய்ப்பும் கிடைக்கின்றது. தன்னம்பிக்கை, ஆளுமைவிருத்தி, ஞாபகசக்தி அதிகரிப்பு, கிரகித்தல் திறன் என்பவை அதிகரிக்கின்றன. பிள்ளைகள் எழுத்துப் பிழையின்றி எழுதுவதற்கு வாசிப்பு உதவுகிறது. தர்க்க சிந்தனையும் விருத்தியடைகின்றது.

ஆகவே, வாசிப்பதன் மூலம்தான் தகவலறிந்த சமுதாயமாக மாற முடிகிறது. இவ்வாறு வாசிப்பானது பல வழிகளில் நமது வெற்றிக்கு பங்களிக்கின்றது. எனவே வாசிப்புத் திறனை வளர்த்துக் கொண்டு வாழ்வில் வெற்றி பெறுவோம். வாழ்க வளமுடன்.

************************************************************

# உன்னைப் பற்றி சில வரிகள்

“நீ பத்துடன் பதினொன்று அல்ல...”

“நீ வேறுபட்டவன், நீ வேறுபட்டவள் ஏனெனில் நீ தனித்தன்மை மிக்கவர்”

“நீ சிறப்பானவன், நீ சிறப்பானவள் ஏனெனில் நீ இறைவனின் உன்னதபடைப்பு”


“நீ ஆற்றல் மிக்கவன், நீ ஆற்றல் மிக்கவள் ஏனெனில் நீ ஓர் அதிசயப் பிறவி”

**”வாழ்க்கை என்பது ஒரு நதியைப் போன்றது. நல்லொழுக்கம் அதில் குளிப்பதற்கான இடம்....”**

# தவக்காலம்



## 10 புனிதர்களும், பயில வேண்டிய 10 புண்ணிய நெறிகளும்.



**1. புனித அன்னை திரேசா**

பசியோடு இருந்தேன் உணவு தந்தீர்கள், தாகமாய் இருந்தேன் தாகத்தை தணித்தீர்கள். ஆடையின்றி இருந்தேன் என்னை உடுத்தினீர்கள், அந்நியனாய் இருந்தேன் என்னை வரவேற்றீர்கள், மருத்துவமனையில், சிறையில் இருந்தேன் என்னைக் காண வந்தீர்கள் என்கிற இறைவார்த்தைக்கு ஏற்ப சின்னஞ்சிறிய சகோதர சகோதரிகளில் ஆதரவற்றோரின் கண்ணீரை துடைத்து இறைவனுக்கு தொண்டாற்றிய புனிதை புனித அன்னை திரேசா.

இத்தவக்காலத்தில் இப்புனிதையிடமிருந்து நாம் பயில வேண்டிய புண்ணிய நெறி **தர்மம்.** இப்புண்ணிய நெறியில் வளர நாம் என்ன செய்ய வேண்டும். உங்களிடம் இருப்பதை ஏழைகளோடும், இல்லாதவரோடும், பகிர வேண்டும்.

**2. புனித வனத்து அந்தோனியார்.**

நிலைவாழ்வை அடைய விரும்பினால் நீ உன் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு பின்னர் வந்து என்னைப் பின் செல் என்கிற இறைவார்த்தையினால் தூண்டப்பட்டு, உடைமைகளை உதறினார், உலகப் பற்றிலிருந்து விடுப்பட்டார், ஜெப, தவத்தில் ஈடுபடத் தொடங்கினார்.

இப்புனிதரிடமிருந்து இத்தவக்காலத்தில் பயில வேண்டிய புண்ணிய நெறி **ஒறுத்தல் செபம் மற்றும் தவம்.** இப்புண்ணிய நெறியில் வளர நாம் என்ன செய்ய வேண்டும். நிலையற்ற உலக மாயைகளில் இருந்து விடுபட்டு நிலையான இறைவனை செபம், தவம், ஒறுத்தல் வழியாக பற்றிக் கொள்ள வேண்டும்.

**3. புனித ஜோன் மரிய வியான்னி**

தினமும் 16 மணி நேரத்திற்கும் அதிகமாக ஒப்புரவு அருள்சாதனம் வழங்கி ஏராளமான ஆன்மாக்களை மனந்திரும்பச் செய்தவர் இப்புனிதர். இப்புனிதரிடமிருந்து இத்தவக்காலத்தில் நாம் பயில வேண்டிய புண்ணிய நெறி **ஒப்புரவு அருள்சாதனம்.**

இப்புண்ணிய நெறியில் வளர நாம் என்ன செய்ய வேண்டும். பாவத்திற்காக மனம் வருந்தி ஒப்புரவு அருள்சாதனத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**4. புனித பதுவை அந்தோனியார்.**

புனித அந்தோனியார் அவருடைய நண்பர் வீட்டு மாடியில் தனிமையாக செபித்துக் கொண்டிருந்த போது குழந்தை இயேசு அவர் கரங்களில் இறங்கி வந்தார். குழந்தை இயேசுவை தனது கரங்களில் ஏந்தும் பாக்கியம் பெற்றவராக பதுவை அந்தோனியார் திகழ்கிறார். இப்புனிதரிடமிருந்து இத்தவக்காலத்தில் பயில வேண்டிய புண்ணிய நெறி **நற்கருணை பக்தி.** இப்புண்ணிய நெறியில் வளர நாம் என்ன செய்ய வேண்டும். நற்கருணை ஆண்டவர் சந்திப்பு, நற்கருணை ஆராதனையில் பங்கெடுத்தல், திருப்பலியில் பங்கெடுத்து, நற்கருணை பெறுதல்.

**5. புனித அகுஸ்தினார்**

ஊதாரி மைந்தனாக வாழ்ந்து கொண்டிருந்த புனித அகுஸ்தினார் "எடுத்து வாசி, எடுத்து வாசி" என்று ஒலித்த குரலைத் தொடர்ந்து விவிலியத்தை எடுத்து வாசித்தார். மனமாற்றம் அடைந்தார்.

இத்தவக்காலத்தில் இப்புனிதரிடமிருந்து பயில வேண்டிய புண்ணிய நெறி **இறைவார்த்தை மற்றும் மனமாற்றம்.** இப்புண்ணிய நெறியில் வளர நாம் என்ன செய்ய வேண்டும். இறைவார்த்தையின் அடிப்படையில் தடம் புரண்ட நம் வாழ்வை சரி செய்ய வேண்டும். இறைவார்த்தையை வாசித்து பாவத்திலிருந்து மனம் திரும்ப வேண்டும்.

**6. புனித பேதுரு பியோ**

இப்புனிதர் திருப்பலி நிறைவேற்றும் போது இவரது உடலில் இருந்து ஐந்து காயங்கள் தோன்றி இரத்தம் வழிய ஆரம்பிக்கும். இயேசுவின் ஐந்து காயங்கள் இவர் வழியாக வெளிப்படுவதைக் காணும் விசுவாசிகள் பரவசமடைகின்றனர். நற்கருணை எழுந்தேற்றத்தின் போது விண்ணக அனுபவத்தைப் பெறுகின்றனர்.

இத்தவக்காலத்தில் இப்புனிதரிடமிருந்து பயில வேண்டிய புண்ணிய நெறி **திருப்பலி.** இப்புண்ணிய நெறியில் வளர நாம் என்ன செய்ய வேண்டும். அனுதினமும் தவறாது திருப்பலியில் கலந்து கொள்ள வேண்டும்.

**7. புனித அல்போன்சா**

என்னைப் பின்பற்ற விரும்புகின்ற எவரும் தன்னையே மறுத்து சிலுவையை சுமந்து கொண்டு பின்தொடரட்டும் என்கிற இறைவார்த்தைக்கு ஏற்ப பாடுகளையும் வியாதிகளையும் தனது உடலில் ஏற்றுக்கொண்டு பொறுமையோடும் அன்போடும் தாங்கிக் கொண்டார்.

இத்தவக்காலத்தில் இப்புனிதையிடமிருந்து நாம் பயில வேண்டிய புண்ணிய நெறி **பாடுகள்.** இப்புண்ணிய நெறியில் வளர நாம் என்ன செய்ய வேண்டும். தவக்காலத்தில் வெள்ளிக்கிழமை தோறும் தவறாது சிலுவைப் பாதையில் பங்கெடுக்க வேண்டும். நமது அன்றாட வாழ்வின் சிலுவைகளை முணுமுணுக்காமல் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**8. புனித இஞ்ஞாசியார்.**

அனைத்தும் இறைவனின் அதி உன்னத இறைமாட்சிக்காக என்கிற இலட்சியத்தோடு இறைபணி ஆற்றியவர் இப்புனிதர். புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றை வாசித்து பின் இவரது வாழ்வு மனமாற்றமடைந்தது.

இத்தவக்காலத்தில் இப்புனிதரிடமிருந்து பயில வேண்டிய புண்ணிய நெறி **ஆன்மிக நூல்கள் வாசித்தல்.** இப்புண்ணிய நெறியில் வளர நாம் என்ன செய்ய வேண்டும். புனிதர்களின் வாழ்க்கை வரலாறு அடங்கிய புத்தகங்களை வாசிக்க வேண்டும். புனிதர்கள் வலைத்தளம் வெளியிடுகின்ற புனிதர்களின் வீடியோக்களை கண்டு தியானிக்க வேண்டும்.

**9. புனித செசிலி**

தலை துண்டிக்கப்பட்டு ரண வேதனை அனுபவித்துக் கொண்டிருந்த புனிதை. அந்த கொடூரமான தருணத்திலும் இடைவிடாமல் 48 மணி நேரம் இறைவனைப் புகழ்ந்து பாடினார். அதன்பின் அவர் இறைவனோடு கலந்தார்.

இத்தவக்காலத்தில் இப்புனிதையிடமிருந்து நாம் பயில வேண்டிய புண்ணிய நெறி **பாடல் பாடுதல்** இப்புண்ணிய நெறியில் வளர நாம் என்ன செய்ய வேண்டும். திருப்பாடல்கள், புகழ்பாடல்கள், ஆராதனைப் பாடல்கள், தியானப் பாடல்கள் பாடி இறைவனைப் போற்றிப் புகழ வேண்டும்.

**10. புனித மாக்ஸ்மில்லியன் கோள்பே**

அன்னை மரியின் பக்தியில் வளர்ந்து வந்த இப்புனிதர் தூய வாழ்வுக்காகவும், மறைசாட்சிய வாழ்வுக்காகவும் ஏங்கினார். அவரின் ஏக்கத்திற்கு ஏற்ப தூய வாழ்வு வாழ்ந்து மறைசாட்சியாய் மடிந்தார். அன்னை மரியாளின் பக்தியை பாரெங்கும் பரவச் செய்யும் ஆர்வம் கொண்ட இவர் இந்தியா ஜப்பான் ஆகிய நாடுகளில் அன்னை மரியாவின் பக்தி வேரூன்றுவதற்கு காரணமாகவும் திகழ்ந்தார்.

இப்புனிதரிடமிருந்து இத்தவக்காலத்தில் பயில வேண்டிய புண்ணிய நெறி **மரியன்னை பக்தி.** இப்புண்ணிய நெறியில் வளர நாம் என்ன செய்ய வேண்டும். அனுதினமும் செபமாலை செபியுங்கள்.

---

# பாறையும் காவலும்



**இனிய இளைஞனே!**

**இளைய இரத்தமே!**

நலமா? உடலும் உள்ளமும் நலமா?

நான் எழுதும் கடிதங்கள் உன்னைக் காயப்படுத்துகிறதா? கடந்து வந்த பாதை உன் உள்ளத்தை ரணமாக்கி விட்டதா? அல்லது உன் காயங்களுக்கு ஒத்தடம் கொடுத்ததா?

நான் எழுதும் கடிதங்களில் முத்தாய்ப்பு வைத்துவிட நான் விரும்புகின்றேன். ஆனால் நீ தொடர் கதையாகினாய்!

திருச்சபை வரலாற்றில் சற்று பின்னோக்கி செல்! அங்கு திருத்தூதர் பேதுருவோடு திருத்தூதர் பவுலின் கதையும் சேர்ந்தே எண்ணப்படுகிறது. இயேசு இராயப்பரை நோக்கினார். இயேசுவால் பாறை என அழைக்கப்பட்டார். இந்த பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன் என்கிறார் இயேசு.

இயேசுவின் உயிர்ப்பினையும் விண்ணேற்பையும் தொடர்ந்து திருச்சபையின் தலைமையை ஏற்கிறார். நீரோ மன்னனால் அவரது இறப்பு நேரிடுகிறது. அவரோடு பவுலும் வாளால் வெட்டுண்டு இறக்கிறார் திருத்தூதர் நினைவுச் சின்னம் இருந்த இடத்தில் கொன்ஸ்டன்னரன் மன்னன் பேராலயம் அமைத்தான்.

இவரது விழா பேதுரு விழாவோடு சேர்ந்து ஆனி 29ல் பவுலுக்கு கொண்டாடப்படுகிறது. திருத்தூதர் பேதுரு பெயரில் 500க்கும் அதிகமான புனிதர்கள் இருக்கிறார்கள்!

**அன்பு நண்பனே! இயேசுவின் சீடனே!**

நீ வாழும் சூழலில் சமூகத்தின் காவலாக செயற்படுகிறாயா? திருத்தூதர் பவுலைப் போன்று எழுத்துலகு ஆவணங்களை பவித்திரமாக பயன்படுத்துவாய் என்று நினைக்கின்றேன்.

**ஆக்கம் : திருமதி. எம். எம். கோஸ்தா**



## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

▶▶ பேதுரு ◀◀

### தவக்காலத்தின் 3வது ஞாயிறு (15.03.2020)

**வாசக விளக்கம்:** மனமாற்றத்தின் பொற்காலம் எனக் கருதப்படும் தவக்காலத்தின் 3வது வாரத்தை தொடங்கும் திருஅவையின் இறைமக்களே இன்றைய நாளிலே இயேசு சமாரிய பெண்ணை சந்தித்துப் பேசிய நிகழ்வை திருஅவையானது நமக்கு நற்செய்தியாக தந்திருக்கின்றது. இந்தப் பகுதியை எத்தனை முறை வாசித்தாலும் அத்தனை முறையும் புதுப் புது அர்த்தங்களை தரவல்லது. இயேசுவும் சமாரியப் பெண்ணும் சந்திக்கிற நிகழ்வானது பல்வேறுபட்ட சிந்தனைகளை தருகின்றது. சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட ஒரு பெண் அனுபவிக்கக்கூடிய உள ரீதியான துன்பங்களை இயேசு நன்றாகவே அறிந்திருந்தார். எனவேதான் அன்று சமாரியப் பெண்ணோடு உறவாடிய இயேசு நம்மோடும் உறவாடுகிறார். உயிர் தரும் வார்த்தைகள் வழியாக நம் உள்ளத்திற்கு உயிரோட்டம் தருகிறார். மனமாற்றம் என்பது எமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து உருவாக வேண்டும். சமுதாய சட்டதிட்டங்களை விட மனித நேயம் உயர்வானது. யாரையும் தீர்ப்பிட எமக்கு அதிகாரம் இல்லை. பிறரை குற்றவாளியாக பார்க்கும் நாம் ஒருகணம் நம்மைத் திரும்பிப் பார்த்தால் உண்மைநிலை தெரிந்துவிடும். இயேசு நம்மீதும் தாகம் கொண்டவர்களாக வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : வி.ப 17:3-7**
குடிக்க எங்களுக்கு தண்ணீர் கொடும்.

**பதிலுரைப் பாடல் :**
உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதீர், ஆண்டவர் குரலைக் கேட்டிடுவீர்.

**இரண்டாம் வாசகம் : உரோ 5: 1-2, 5-8**
தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
ஆண்டவரே, நீர் உண்மையிலே உலகின் மீட்பர் நான் தாகம் கொள்ளாதபடி வாழ்வு தரும் தண்ணீரை எனக்கு அளித்தருளும்.

**நற்செய்தி வாசகம் : யோவா 4:5-42 அல்லது யோவா 4:5-25, 19-26, 39-42**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இயேசுவின் இரக்கத்தையும், குணமளிக்கும் ஆற்றலையும், அதிகாரம் மிக்க போதனையையும் தன்னகத்தே கொண்டு தன் மக்களுக்குப் பணியாற்றி வரும் திருஅவையின் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர், துறவியர், இறைமக்கள் யாவருக்கும் உமது அன்பையும் ஆவியின் வல்லமையையும் அளித்து வழிநடத்த வேண்டுமென்று...

சமாரியப் பெண்ணின் உள்ளத்தில் இருந்த தீய ஆவியின் தீமைகளான பயம், கவலை, குற்றப்பழி உணர்வு, தாழ்வு மனப்பான்மை போன்றவற்றை இயேசு களைந்தார். இதனால் இயேசுவின் சீடத்தியாக மாறிய அவள் இயேசுவின் நற்செய்தியாக தன் இனமக்களுக்கு இயேசுவை அறிவித்துப் பலரையும் இயேசுவிடம் அழைத்து வந்ததுபோல் திருஅவை மக்களாகிய நாமும் செயல்பட வரமருள வேண்டுமென்று...

சமாரியப் பெண்ணின் உள்ளம் கடவுளைத் தேடும் உள்ளமாக இருந்ததால் இயேசுவை அவள், ஐயா இறைவாக்கினர், மெசியா என்று மூன்று நிலைகளில் ஏற்றுக்கொள்கிறாள். அதுபோல் நாமும் நமது விசுவாச வாழ்வில் நோயில் குணப்படுத்துபவராக, துன்பத்தில் தேற்றுகிறவராக, தனிமையில் தோழனாக, வறுமையில் வழங்குபவராக இதயத்தின் தேவனாக இயேசுவை ஏற்றுக் கொண்டு ஆவியிலும் உண்மையிலும் வழிபடும் மக்களாக வாழ வரமருள வேண்டுமென்று...

### தவக்காலத்தின் 4வது ஞாயிறு (22.03.2020)

**வாசக விளக்கம்:** தவக்காலத்தின் 4வது வாரத்தில் கால்பதிக்கும் திருஅவையின் அன்பின் திருக்கூட்டமே இறைமக்களே! தொடக்க நூலில் கடவுள் "ஒளிதோன்றுக" என்று கூறி இருள் சூழ்ந்த உலகை ஒளியால் நிரப்பினார். இயேசுவும் உலகின் ஒளிநானே! என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார். வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார் என்கிறார். நற்செய்தியிலே இயேசு பிறவிக் குருடனை பார்வை பெறச் செய்கின்றார். இயேசுவின் இந்த அருள் அடையாளம் அவரை உலகிற்கு வந்த ஒளியாகக் காட்டுகிறது. இயேசுவினுடைய இந்தப் புதுமைக்குப் பின்பு பார்வையற்ற மனிதனின் விசுவாச அறிக்கையைக் காணக்கூடியதாக இருக்கிறது. யூதர்கள் அம் மனிதனைக் கேள்வி கேட்கின்ற போது துணிவோடு அவர் ஒரு இறைவாக்கினர் என்று இயேசுவினுடைய புதுமைக்கு சான்று பகர்கின்றார். யூதர்களோ மனிதனுடைய மாண்பிற்கும் அவன் உடல் துன்பத்துக்கும் கொடுத்த முக்கியத்துவத்தை விட மனிதனை மனிதனாக ஏற்றுக் கொள்ளத் தடையாக இருக்கின்ற வெற்றுச் சடங்குகளுக்கு முக்கியத்துவத்தை கொடுத்து மனித மாண்பைப் புறக்கணித்தனர். எனவே எமது வாழ்க்கையில் இயேசுவின் அருள் அடையாளங்களைப் பெற்றுக்கொள்ளும் நாம், அவருக்கு சான்று பகர்கின்றவர்களாக வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : 1 சாமுவேல் 16:1,6-7,10-13**
இஸ்ரயேல் மீது அரசனாக தாவீது திருப்பொழிவு செய்யப்பட்டான்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரே, என் ஆயர் எனக்கேதும் குறையில்லை.

**இரண்டாம் வாசகம் : எபேசி 5:8-14**
இறந்தவனே உயிர்பெற்றெழு, கிறிஸ்து உன்மீது ஒளிர்ந்தெழுவார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
உலகின் ஒளி நானே, என்னைப் பின் தொடர்பவர் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார் என்கிறார் ஆண்டவர்.

**நற்செய்தி வாசகம் : யோவா 9:1-41 அல்லது யோவா 9:1,6-9, 13-17, 34-38**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இயேசுவை விசுவசித்து அவரது பார்வை பெற்று திருஅவையின் மக்கள் அனைவரையும் ஒளியின் மக்களாக வழிநடத்தும் திருஅவையின் பணியாளர்களான திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர், துறவியர் இறைமக்கள் யாவரும் மாறிவரும் இன்றைய உலகில் எப்பொழும் புதுப்பார்வை பெற்றவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று...

எமது நாட்டில் உள்ள சமூக, சமய, அரசியல் தலைவர்களும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் உண்மை, நீதி, நேர்மை போன்ற பார்வையுள்ளவர்களாக மக்களின் நலன் சார்ந்த விடயங்களில் பணியாற்றவும் ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதங்கள் பாராது சமத்துவப் பார்வை கொண்டவர்களாக செயல்படவும் வேண்டிய வரங்களை தந்தருள வேண்டுமென்று...

பார்வையற்ற மனிதனுக்கு இயேசு புறப்பார்வையை மட்டுமன்றி அகப்பார்வையான விசுவாசப் பார்வையையும் கொடுத்தார். பார்வையிலிருந்தும் குருடர்களாய் நாம் வாழ்ந்த தருணங்களை எண்ணி மனம் வருந்தி புதுப் பார்வை பெற்றவர்களாக வாழவும் ஒளி தரும் மெசியாவை ஏற்றுக்கொண்டவர்களாக எம் வாழ்க்கைப் பயணத்தை தொடரவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

### தவக்காலத்தின் 5வது ஞாயிறு (29.03.2020)

**வாசக விளக்கம்:** தவக்காலத்தின் 5வது வாரத்தை தொடங்கும் திருஅவையின் அன்பான இறைமக்களே! இந்த வாரம் எமது மனமாற்றத்தின் வாரம். ஆண்டவரோடு ஒப்புரவாகும் காலம் என்பதை முதலில் மனதில் கொள்வோம். மனிதனின் வாழ்க்கைக்கு தூண்டுகோலாக, உறுதுணையாக, அரவணைத்து வழிநடத்திச் செல்லும் அன்னையாக ஆண்டவரின் வார்த்தை உள்ளது. இதை உணர்ந்து வாழ தாய்த் திருஅவை அழைக்கின்றது. உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை என்பது இறைவனின் ஆவியால் நிரப்பப்பெற்று வழிநடத்தப்பட வேண்டும். அப்பொழுது தான் இறைவனுக்கு நாம் சாட்சியுள்ளவர்களாய் மாற முடியும். இன்றைய நற்செய்தியில் நாம் இறந்துபோன லாசரை இயேசு உயிர்ப்பிப்பதை பார்க்கின்றோம். இதன் வழியாக இறைவார்த்தை வல்லமையுள்ளது. ஆற்றலுள்ளது. இயேசுவுக்கே சாவின்மீது அதிகாரமுள்ளது. அவரே உயிர்ப்பும் உயிரும் என்பதை அறிந்து கொள்ளுகின்றோம். இலாசரே வெளியே வா என்று அழைத்த இறைவார்த்தை இன்று நம் அனைவரையும் பார்த்து நமது பாவம் எனும் கல்லறைகளிலிருந்து வெளியே வாருங்கள் என்று அழைக்கின்றது. எனவே இறைவார்த்தைமீது நம்பிக்கை கொண்டு மனம் மாறி இறைவனோடு ஒப்புரவாகி வாழ இறையருள் வேண்டிடத் தொடரும் பலியில் இணைவோமாக.

**முதல் வாசகம் : எசே 37:12-14**
என் ஆவியை உங்கள் மீது பொழிவேன், நீங்களும் உயிர்பெறுவீர்கள்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரிடமே பேரன்பும் மீட்பும் உள்ளது

**இரண்டாம் வாசகம் : உரோ 8:8-11**
இறந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தவரின் ஆவி உங்களுக்குள் குடிகொண்டிருக்கிறார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார் என்கிறார் ஆண்டவர்

**நற்செய்தி வாசகம் : யோவா 11:1-15**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கிறிஸ்தவ வாழ்விற்கு ஆனந்தமும், அர்த்தமும், அனுபவமும் தருகின்ற இறைவார்த்தையை இறைமக்கள் அனைவருக்கும் வழங்க அர்ப்பணிப்புடன் செயல்படும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர், துறவியர், இறைமக்கள் அனைவருக்கும் இறைவாக்குப் பணியில் மென்மேலும் ஆர்வமுடன் உழைத்திட வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

நாமும் இத்தவக்காலத்தில் எமது சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும் இறைவனுக்கும் அயலாருக்கும் எதிராக செய்துள்ள அனைத்துப் பாவங்களையும் எண்ணி மனம் வருந்தி மன்னிப்பு கேட்கவும், இலாசரை வெளியே வா என்று அழைத்த இறைவார்த்தை பாவம் என்றும் கல்லறையிலிருந்து வெளியே வாருங்கள் என நம்மையும் அழைக்கின்றது என்பதை உணர்ந்தவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று...

தவக்காலத்தின் இறுதி நாட்களை கடந்து செல்லும் நாம் மனமாற்றம் பெற்றவர்களாக எம் பாவங்களுக்காக மரித்து புதுவாழ்வுக்காக உயிர்பெற்று எழவும், வாழ்வுக்கு முகவுரையையும் சாவுக்கு முடிவுரையையும் எழுதும் இறைவார்த்தையை நம்பிக்கையுடன் ஏற்று எமது ஆன்மீக வாழ்வை காத்துக் கொள்ளவும் வரமருள வேண்டுமென்று...

**இத்தவக்காலத்தில்**

**ஒருவரை தீர்ப்பிடாதிருக்கவும், கண்டனம் செய்யாதிருக்கவும், மன்னிப்பு வழங்கவும், நாம் என்ன செய்ய வேண்டும்?**

**கொடுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும், கொடுக்கும் போது தாரான மனதுடன் செயற்பட வேண்டும். பொருட்கள் வடிவில் உதவிகள் செய்யுங்கள், ஆன்மீக உதவிகள் வழங்குங்கள், தேவையில் இருப்போருடன் உங்கள் நேரத்தை செலவிடுங்கள், நோயுற்றோரை சந்தியுங்கள், புன்சிரிப்புடன் பரிசளியுங்கள்.**

**- திருத்தந்தை**

# நசரேத்து இயேசுவின் ஆன்மீகம்

ஆக்கம் : அருட்பணி.
ஜெராட் டீ ரோசாய்ரோ, அ.ம.தி.



**ஆன்மீகம் என்பது ஒருவரது சுற்றுச் சூழலுக்கு ஒருவர் திறந்த மனப்பான்மையுடன் பதிலளித்து வாழ்வதாகும்.** ஒருவரது சூழல் அமையும் விதத்தில் அவரது பதிலும் அமையும். சூழல் நேர்மையும், உண்மைத்தனமும், மனித நேயமும் கொண்டதாக அமையும் போதும், சூழல் வன்முறையும், அநீதியும் கொண்டதாக மாறும் போதும், ஒருவரது பதிலும் அதற்கு அமைவாகவும் மாறுகிறது.

தான் வாழும் சூழலின் நிலை எதுவாயினும், **கடவுளின் குடியிருப்பு ஒருவரின் சூழலில்தான் உண்டு என்ற நம்பிக்கையால் செயல்படும் போது அது ஒருவரது ஆன்மீகச் செயலாகின்றது.** இஸ்ரயேலரின் கடவுள் அவர்கள் அடிமைகளாக்கப்பட்ட சூழலில் குடியிருந்து அவர்களின் விடுதலைக்காக குரல் கொடுத்தார் (விப. 3:7-10). மோயீசன் ஆரோன் மூலம் அச்சூழலுக்கு அமைவாக கடவுள் செயல்பட்டார். அவர்களது மாறுபட்ட சூழலில் கடவுள் இறைவாக்கினர்கள் வழியாக அவர்களுடனிருந்து பேசினார், செயல்பட்டார் (1சாமு. 13:21-22; எசா. 1: 11-17; ஒசே. 6:6..). இஸ்ரயேலர்களின் வரலாறு, கடவுளின் குரலுக்கு வாழும் சூழலில் செவிசாய்த்து, அவர் குரலுக்குப் பணிந்து வாழ்வதே ஆன்மீகம் என்ற பாடத்தைக் கற்பிக்கின்றது.

**ஆன்மீகம் என்பது தூய ஆவியால் வழிநடத்தப்படும் வாழ்வாகும்.** ஆயினும் எது அல்லது எந்த ஆவி என்ற கேள்வி தோன்றுகிறது. அதனால்தான் புனித பவுல் ஊனியல்பின் செயல்கள் ஆவியின் செயல்கள் என பிரித்து, தூய ஆவியின் தூண்டுதலில் அமையும் செயல்களை கிறிஸ்தவ முழுமங்களுக்கு பல தடவைகள் தெளிவுபடுத்தியுள்ளார் (உரோ.7:14-24; 8: 5-8; 1கொரி. 3:1-4; கலா. 5:17-21). ஆக, **தாம் வாழும் சூழலில் கடவுளின் குடியிருப்பை உணர்ந்து, அவரது குரலைக் கேட்டு, அவரது ஆவியின் வழிநடத்தலில் பதிலளித்து வாழ்வதே ஆன்மீகமாகும்.** இயேசுவின் ஆன்மீகம் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## இறை ஆவியில் இயேசு ஆன்மீகம்

**தூய ஆவி தாய் மரியாளை நிழலிட்டதால் உற்பவித்தவர்.** காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட ஆலயம் சென்றிருந்த வேளையில் தூய ஆவியால் நிரப்பப்பட்டவர்களாக சிமியோனும், அன்னாளும் இயேசுவின் மெசியாத் தன்மை பற்றிப் பேசினார்கள். இயேசு தாய் தந்தையுடன் நசரேத்தில் அறிவிலும், ஞானத்திலும், உடல்வளர்ச்சியிலும் மிகுந்து, கடவுளுக்கு ஏற்புடையவராகவும், மனிதரால் அன்புசெய்யப்பட்டவராகவும் காணப்பட்டார் என புனித லூக்கா குறிப்பிடுகிறார். இவை எல்லாம் இயேசுவின் பிள்ளைப் பருவத்தில் அவரில் காணப்பட்ட கடவுளின் ஆவியின் விளைவுகளாகும் (லூக். 1:35-38; 2:25-38; 2:40-50).

**இயேசுவின் திருமுழுக்கில் தூய ஆவி அவர் மீது இறங்கிவரக் கண்டார்** என்றும், அதே ஆவியால் பாலைவனத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே அவரது இறை அரசுப்பணியை ஆரம்பிக்க வழிநடத்தப்பட்டார் என்றும் நற்செய்தி ஆசிரியர்கள் எழுதியுள்ளார்கள் (மாற். 1:12-13; லூக். 3:21). பாலைவனத்தில் ஆன்மீகப் பயிற்சி பெற்ற இயேசு தமது சொந்த ஊரான நசரேத்துக்கு வந்து, செபக்கூடத்தில் இறைவாக்கினர் எசாயா ஏட்டிலிருந்து படிக்கிறார் (எசா.61:1-2 - லூக். 4: 14-17). **“தூய ஆவி என்மேலே” எனத்திடம் கொண்ட இயேசு,** தம், படிப்பினையால், பணி வாழ்வால் பதிலளிக்கப் போகும் மானிட வாழ்வுச் சூழலை கோடிட்டுக்காட்டுகிறார். அநீதியும், ஏற்ற தாழ்வும், புறக்கணிப்பும், அதனால் வாழ்வுக்காக ஏங்கி நின்ற பெரும்பான்மையினரையும், சமய வழிபாடுகளுடனும், சட்டங்களுடனும் மறைந்து கொண்ட பெரிய, சிறிய சமயக் குருக்களையும், சுயநலமான செல்வர்களையும் கொண்ட அச்சூழலில் “இறையாட்சி நெருங்கிவிட்டது, மனந்திருந்துங்கள்” என்ற முழக்கத்துடன் சூழலுக்குள் குடியிருக்க ஆரம்பித்தார் (மத். 5-7; 11:25-30; மாற். 10:17-31; லூக். 6:20-42). தந்தைக் கடவுளுக்கு திறந்த மனத்துடன், கீழ்படிந்து அவரது விருப்பின்படி தம் சூழலில் வாழ திடம் கொண்டார். இதனை **‘தம்மவர் நடுவே குடியிருந்தார்’** என புனித யோவான் குறிப்பிடுகிறார் (யோவா. 1:14).

## கடவுளின் விருப்பில் இயேசு ஆன்மீகம்

அச்சூழலில் பரிவும், பகிர்வும், அன்பும், அறமும், சமத்துவமம், சகோதரத்தவமும் கொண்ட இறை மக்கள் சமூகம் உருவாக வேண்டும் என்பதே கடவுளின் விருப்பு (தொநூ. 4:4...; ஆமொ.5:21-24; எரே. 6:20; ஒசே. 6:6). அதனால் **யூதனான இயேசு, தம் வரலாற்றில் குடியிருந்து, தம் மக்களோடு பயணித்து, வரலாற்றை உருவாக்கிய கடவுளுக்கு பணிவு கொண்டார்.** பல்விதமான உடல், உள நோய்களால் துன்பப்பட்டவர்களை குணமாக்கினார். பசித்திருந்தவர்கள் மீது இரக்கங் கொண்டு உணவளித்தார். பாவிகள், ஆயக்காரர் என ஒதுக்கப்பட்டவர்களுடன் சேர்ந்து உண்டார், புறக்கணிக்கப்பட்ட சமாரியர்கள், கனானேயர்கள் வாழ்ந்த பகுதிகளுக்குச் சென்றார். ஓய்வு நாளிலும் வாழ்வைக் காக்கவும், பேணவும், சமயத்தலைவர்களின் கொலையுணர்வு சதிக்கு இலக்காகும் அளவுக்கு நற்செயல்களில் ஈடுபட்டார் (மாற்.1:14; யோவா.5:9).

**இயேசுவின் இரக்கத்திற்கு கரையில்லை எனலாம்.** பரிசேயன் வீட்டில் இயேசு விருந்துண்ண சென்றிருந்தார். இயேசுவின் வரவால் பரிசேயன் மகிழ்திருந்தான். மறுகணம் ஒரு பெண்ணின் வருகையாலும், அவளுக்கு இயேசு அளித்த வரவேற்பாலும் பரிசேயனின் உள்ளத்தில் கலக்கமும், கயமையும், கடுகடுப்பும் ஏற்படுகிறது. மனம் வருந்தும் பாவியை மட்டுமல்ல, கயமை **உள்ளங் கொண்டவருக்கும் இயேசுவின் இரக்கம் கிடைத்தது** (லூக் 7: 36-50; 15: 11...; மத். 9: 10-19; 18:12-14). இயேசு இவ்வாறு மகிழ்வோடு ஆவியுடன் ஒத்துழைத்து, திறந்த மனத்துடன் நற்செயல்கள் புரிந்தார். இறைதந்தையின் விருப்பை நிறைவேற்றுவதற்கு தடையாக இருந்தவர்களையும் கனிவுடனும், கண்டிப்புடனும் மனந்திருந்தி வாழ அழைத்தார்.

## இயற்கையில் இயேசு கற்ற ஆன்மீகம்

**விண்ணகமும் அதில் உள்ளவையும், மண்ணகமும் அதில் உள்ளவையும் கடவுளின் மகிமையை பறைசாற்றுகின்றன. அவை இறையை நாடி வாழ்கின்றன.** இது திருப்பாக்களும் (திபா. 19; 29; 93; 96; 148), இறைவாக்கினரும் (எசா.1:1-11) உணர்த்தும் பாடம். யூதனான இயேசுவும் அவரது சமய மரபைப் பின்பற்றி தம் இறைபற்றை வளர்த்துக் கொண்டார். வானத்துப் பறவைகளிலும், வயல் வெளிப் பூக்களிலும் இறை பராமரிப்பைக் கண்டார். எதை உண்பது, எதை உடுத்துவது என்பதில் மட்டும் கவலை கொண்டு தொலைந்து விட வேண்டாம் என்றார். ஏன்? “உணவைவிட உயிரும், உடையைவிட...

தொடர்ச்சி 15ம் பக்கம்..





ஆண்டவரின் அன்பை நாடி, அடுத்திருப்பவரின் கண்ணீர் துடைப்போம்!

கொழும்பு உயர்மறைமாவட்டம் 21.03.2020 சனிக்கிழமை தவக்கால நிதி சேகரிப்பு நடாத்தப்படவுள்ளது. இந்நிதி சேகரிப்பானது கீழ்குறிப்பிட்ட காரணங்களுக்காக சேகரிக்கப்படும்.

1. முதியோருக்கான வாழ்வாதாரம்,

2. அங்கவீனர்–களுக்கான மருத்துவ வசதி,

3. அங்கவீனர்–களுக்கான கல்வி வசதி,

ஞான ஒளி GNANA OLI

# தேவத்தை சிறுவர் தின நிகழ்வுகள் - 2020



# இத்தகொட தோட்டத்தில் அன்னை வேளாங்கண்ணிக்கு ஓர் ஆலயம்

ஆக்கம் : தகவல் : திரு. கிறிஸ்டோபர்,
கத்தோலிக்க தோட்டத் தலைவர், இத்தகொட

கொழும்பு உயர்மறைமாவட்டத்தைச் சேர்ந்த மத்துகம பங்கின் கீழ் உள்ள இத்தகொட கிராமம் மத்துகம பங்கு தேவாலயத்திலிருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவில் இயற்கை வளம் கொண்ட தேயிலை, இறப்பர் தோட்டங்களை உள்ளடக்கி அழகிய மலைகளால் சூழப்பெற்ற தோட்டமாக விளங்குகின்றது.

அங்கே நாடிவரும் மக்களுக்கெல்லாம் அன்னையாக அரவணைக்கும் புதுமை பல பொழியும் வேளாங்கண்ணித் தாயின் ஆலயமானது மண்ணிலிருந்து விண்ணை நோக்கிய அழகு நிறைந்த ஆலயமாக திகழ்வது சிறப்பு அம்சமாகும்.

இவ்வாலயமானது மத்துகம புனித மரியாள் பங்கிற்கு சொந்தமான ஒரு சிற்றாலாயமாகும். இவ்வாலயமானது தோட்டத்தில் உள்ள கத்தோலிக்க மக்களுக்கு மட்டும் அல்லாமல், இந்து மக்களுக்கும் ஒரு ஆசீர்வாதமாக திகழ்வதோடு, அன்னை வேளாங்கண்ணி தாயின் அற்புதங்களை பலரும் கண்டு உணர்வது மறைக்க முடியாத உண்மையாகும்.





## வரலாறு

கி.பி 19ம் நூற்றாண்டு காலப்பகுதியிலிருந்து இத்தகொட தோட்டக் கத்தோலிக்க மக்கள் வாழ்ந்து வந்ததாக நம்பப்படுகின்றது. இக்கிராமத்தில் இறப்பர், தேயிலை, மரவள்ளி, கரும்பு உற்பத்தி செய்கையாகவும் இக்கிராமத்தில் தொழிலாகவும் இருந்து வந்தது. 1932ம் ஆண்டு காலப்பகுதியில் கிட்டத்தட்ட 25 கத்தோலிக்க குடும்பங்கள் இக்கிராமத்தில் வாழ்ந்து வந்துள்ளதாகவும், பிற்காலங்களில் கிட்டத்தட்ட 6 குடும்பங்கள் இந்தியாவிற்கு சென்றதாக கூறப்படுகின்றது.

இம்மக்களின் விசுவாசமானது தோட்ட முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்ட வாகனத்திலே நத்தார் திருவிழாத் திருப்பலிக்கு மத்துகம தேவாலயத்திற்கு வருடத்திற்கு ஒருமுறை செல்வதும் அதற்கு மேலதிகமான வீடுகளில் விளக்கேற்றி மாலை வேளைகளில் செபமாலை செபிப்பதும் வழக்கமாக இருந்தது. அத்தோடு இது இவ்வாறிருக்க ஆரம்பத்திலிருந்தே தற்போது ஆலயம் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இடத்தில் ஒரு சிலுவையானது **"சிலுவைக்குருஸ்"** என்று அழைக்கப்பட்டு அவ்விடத்திலே மெழுகுதிரி பற்றவைத்து அடிக்கடி கஞ்சி காய்ச்சி கொடுக்கும் வழக்கமுண்டு.


1966ம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து சுமார் பத்து வருடங்கள் தோட்ட அதிகாரியின் வதிவிடத்தில் அருட்தந்தையர்கள் மாதத்திற்கு ஒருமுறையாவது திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. 1981ம் ஆண்டு பகுதியில் சிலுவைக்கு அண்மையில் காணப்பட்ட பழைய பாடசாலையானது கத்தோலிக்க வழிபாடுகளுக்காக பயன்படுத்துவதற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட நான்கு வருடங்களாக குருவானவரால் திருப்பலி மாதத்திற்கு ஒருமுறையாவது ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது.




அவ்விடமானது புனித மிக்கேலுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சிற்றாலயமாக மத்துகம பங்கின் வரலாற்று ஏடுகளில் காணப்படுகின்றது. இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் ஏழ்மையாக வாழ்ந்ததோடு, தோட்ட அதிகாரிகளின் வழிகாட்டலின் கீழேயே அவர்களுடைய மட்டுப்படுத்தப்பட்ட ஆன்மீகத் தேவையானது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக இம்மக்கள் கத்தோலிக்க விசுவாசத்தை தமக்கு தெரிந்த விதத்தில் வாழ்ந்து கொண்டிருந்தபோது கிறிஸ்தவ அடிப்படைவாதக் குழுக்களின் செயற்பாடுகள் இத்தோட்டத்திற்குள் அதிகரிக்க தொடங்கியுள்ளது. இங்கிருக்கக் கூடிய கத்தோலிக்க மக்கள் ஞாயிறு திருப்பலிக்கு மத்துகம தேவாலயத்திற்கு செல்வது தூரம், பொருளாதார பிரச்சினையால் சிரமமாக இருந்தது. அதைப்போல மத்துகம தேவாலயத்தில் வழிபாடுகளும் தமக்கு விளங்காத மொழியிலே காணப்பட்டது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் அடிப்படைவாத சபைகள் பலவிதமான பொருளாதார சலுகையோடு இம்மக்களுக்கு தெரிந்த மொழியிலேயே இவர்களை....

தொடர்ச்சி 15ம் பக்கம்..





I. ஜினுஷன். ஆண்டு 8, மொனராகலை.

# என் அன்பு அம்மா



தாயே! என் அன்பு தாயே!!
என் மேல் பாசம் உள்ள தாயே!
எனக்கு பிடித்த தாயே!
என் ஆசையை நிறைவேற்றும் தாயே!
பொறுமையுள்ள தாயே!
வெற்றியில் கை கொடுக்கும் தாயே!
தோல்வியில் ஆதரவு கொடுக்கும் தாயே!
இதுபோல் மற்ற மகன்களுக்கு கிடைக்குமா
தாயே! உன் அன்பு!!

**ஐ. ஜினுஷன்** தரம் 8
புனித அந்தோனியார் ஆலயம்
மொனராகலை.

# மறைக் கல்வி அறிவோம்

## மரியாள்



**01. மரியாள் யார்?**

- மனுவுரு கொண்ட தம் திருமகன் ஆண்டவர் இயேசுவின் தாயாராக இருக்கும்படி இறைவனால் தேர்ந்துக் கொள்ளப்பட்ட மாசற்ற கன்னியே மரியாளாவார்.

**02. மரியா இறைவனின் அன்னையானது எவ்வாறு?**

- மரியாளிடம் பிறந்த ஆண்டவர் இயேசு மனுவுரு கொண்ட இறைவனாவார். இதனால் ஒரே ஆளாயிருக்கும் அவருக்கு இறை இயலும், மனித இயலும் இருந்தது. இவ்வாறு இறை இயல்பு கொண்ட ஆண்டவர் இயேசுவின் தாயானதால் மரியா இயேசுவின் தாயாராகின்றார்.

**03) மரியாள் இறைவனிடம்பெற்றுள்ள அருட்கொடைகள் யாவை?**

- இறைவனின் தாயாகியமை
- சென்ம பாவமில்லாமல் உற்பவித்தமை.
- தாயாக இருந்தாலும், தன் மகனை பெற்றெடுக்க முன்பும் பெற்ற பின்பும், கன்னியாக இருந்தது
- ஆன்மாவோடும், உடலோடும் விண்ணகம் சென்றமை.

**04) இறைவனின் அன்னை என்பதன் பொருள் என்ன?**

- இறை அன்னை என்ற பதம், இறை சித்தத்தை ஏற்று, மரியாள் தூய ஆவியானவரின் அருளால் கருவுற்று இறைமகனின் தாயாகியமையைக் குறிக்கிறது.

**ஞான ஒளி**
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.

மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com

**பங்குனி மாதம் 25ம் திகதிக்கு முன்னர் மேலுள்ள முகவரிக்கு அல்லது ஈ-மெயிலுக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்புங்கள்.**
பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களுடன் எமக்கு அனுப்பவும்.




## விவிலியப் பகுதி



**நற்செய்தி : புனித மாற்கு**

**அதிகாரங்கள் – 10–11**


198. பார்வையற்றவனின் பெயர் என்ன?
199. பார்வையற்றவன் எவ்வாறு கதறினான்?
200. இயேசு தனக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்பினான்?
201. பார்வையற்றவன் இயேசுவை எவ்வாறு அழைத்தான்?
202. இயேசு ஒலிவ மலை அருகிலுள்ள எந்த ஊர்களுக்கு வந்து எருசலேமை நெருங்கினார்?
203. கழுதைக்குட்டியை கொண்டு வரச்சென்ற சீடர்களின் எண்ணிக்கை எத்தனை?
204. வீட்டு வாயிலுக்கு வெளியே தெருவில் கட்டி வைக்கப்பட்டிருந்தது எது?
205. ‘ஓசான்னா” எனும் எபிரேய சொல் குறிக்கும் இருவேறு அர்த்தங்கள் எவை?
206. எபிரேய வழக்கில் வாழ்த்தை தெரிவிக்கும் சொல்லாகவும் அமைந்தது எது?
207. ‘இனி உன் கனியை யாரும் உண்ணவே கூடாது என அத்திமரத்தை பார்த்து கூறியவர் யார்?

15ம் பக்கம் தொடர்ச்சி

**இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக் குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்!!**
(புனித யோவான் 1:29)



# இயேசுவும் மூன்றும்



வை காண வந்தவர்கள் - மூன்று ஞானிகள்
அலகையால் சோதிக்கப்பட்டது - மூன்று முறை
சிலுவைப் பாதையில் விழுந்தது - மூன்று முறை
சிலுவையில் அறையுண்ட ஆணிகள் - மூன்று
சிலுவையில் தொங்கிய நேரம் - மூன்று மணி
செத்சமனி தோட்டத்தில் செபித்தார் - மூன்று சீடர்களுடன்
வை பேதுரு மறுதலித்தது - மூன்று முறை.
மறுரூபமான போது இருந்தவர்கள் - மூன்று சீடர்கள்.
வை கல்லறைக்கு காண சென்றவர்கள் - மூன்று பேர்.

**வேர்னியா கிறிஸ்மா பர்னாந்து**
**நல்லாயன் கன்னியர் மடம் ஆண்டு 5**
**கொழும்பு கொட்டாஞ்சேனை.**

# உலகின் பாவங்களைப் போக்கும் செம்மறி

ஜெர்மனி நாட்டிலுள்ள எவன்டன் நகரில் இருக்கும் கத்தோலிக்க கோவில் கூரை ஒன்றின் மீது ஓர் அழகிய செம்மறியைப் பார்க்கலாம் அது கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் கோவிலில் கூரைமீது வேலை செய்து கொண்டிருந்த ஒருவன் கால் தவறிக் கீழே விழுந்தான். தரையில் பெரிய கற்கள் கிடந்தன. அவற்றின் மீது அவன் விழுந்த போதிலும் அவனுக்குக் கடுங்காயம் ஏற்படவில்லை. இரண்டு பெரிய கற்களுக்கு மத்தியில் ஒரு செம்மறி மேய்ந்து கொண்டிருந்தது. அதன் மேல் அவன் விழ, செம்மறி உடனே செத்து, அவன் காப்பாற்றப்பட்டான்.

இதற்கு நன்றியாக அவன் கல்லால் ஒரு செம்மறியைச் செதுக்கி கூரை மீது வைத்தான். தன்னைக் காப்பாற்றிய வாய் பேசா மிருகத்திற்கு அவன் இவ்விதம் தன் நன்றியை தெரிவித்தான்.

நாம் நித்தியத்திற்கும் சாக இருந்தோம். கடவுளின் செம்மறியான இயேசு நம்மைக் காப்பாற்றினார். நாம் வாழும் வண்ணம் அவர் முழுமனதுடனும், அன்புடனும், தம் உயிரைக் கொடுத்தார். இதனால்தான் உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறி யென யோவான் அவரைச் சுட்டிக்காட்டினார்.




## உன்னோடு ஒரு நிமிடம்

# இயேசு மனிதர்களைப்போல் கோபப்பட்டார்



நண்பா நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய் கோபப்பட்டால் நல்ல மனிதனாக வாழ முடியாது, புனிதனாக மாற முடியாது நிறைவு நிலைக்கு எதிரானது, மக்களின் அன்பை இழந்துவிடுவேன், மக்களை மகிழ்ச்சிப்படுத்த இயலாது, மக்கள் என்னை விரும்பமாட்டார்கள், மக்கள் மத்தியில் புகழும் செல்வாக்கும் குறைந்துவிடும் என்ற தவறான கொள்கைகளை வைத்துக் கொண்டு, நல்ல மனிதனாக வாழ எண்ணி, புனிதமான மனிதனாக வாழ எண்ணி, கோப உணர்வு இல்லாத மனிதனாக வெளியில் காட்ட விரும்புகிறாய்,

கோபமும் புனிதமும் ஒருங்கிணைந்து செல்லாது என்ற எண்ணம் கொண்டிருக்கிறாய் ஆகவே, நீ கோபத்தை அடக்கி வைக்கின்றாய், கோபத்தைக் கட்டுப்படுத்துகின்றாய் அடக்கி வைக்கப்பட்ட கோப உணர்வு ஆரோக்கிய வாழ்வுக்கு நல்லதன்று அடக்கி வைக்கப்பட்ட கோப உணர்வு எப்படியாவது வெளிபட்டு விடுகிறது.

ஆகவே கோபம் என்பது புனிதத்துக்கு அப்பாற்பட்டது என்று எண்ணாதே.

அறச்சினம் என்று நீ அறிந்திருப்பாய் என் மகன் இயேசுதான் அதற்கு மிகப்பெரிய அடையாளம்

அநீதியான முறையில் பற்பல திருச்சட்டங்களைச் சுமக்க வேண்டும் என என் மக்களை வாட்டிய பரிசேயர்கள் மீது என் மகன் இயேசு கோபம் கொண்டார்.

என் இல்லத்தில் விற்பவர்கள் வாங்குபவர்கள் எல்லாரையும் வெளியே துரத்தினார். நாணயம் மாற்றுவோரின் மேசைகளையும், புறா விற்போரின் இருக்கைகளையும் கவிழ்த்துப் போட்டார் (மத் 21:12).

என் மகன் மறைநூல் அறிஞர் பரிசேயரின் போலித்தனத்தைக் கண்டு சினம் கொண்டு வெளிவேடக்காரர்களே என்று அழைத்தார். வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு அவர்களை நிகராக்கினார். கோபக்கனல் வீசி வசைமாரி பொழிந்தார்.

என் மகன் இயேசு அத்தி மரத்தைச் சபித்த நிகழ்ச்சியில் வித்தியாசமான வெறுப்புடன் கூடிய கோபத்தைச் சுட்டிக் காட்டுகிறார் "இனி நீ கனி கொடுக்கவே மாட்டாய்" என்கிறார் (மத் 21:19).

அத்தி மரம் என்பது எருசலேமின் அடையாளம். இன்னும் அது பலன் கொடுக்கவில்லை. என் மகனின் நியாயமான எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை எந்தவொரு மனிதனும் தாம் எதிர்பார்ப்பதை அடையவில்லையென்றால் சினம் கொள்வது இயற்கை.

தமது சினத்தால் என் மகன் ஒரு மனிதர் மட்டுமல்ல மாறாக தந்தையான என்னோடு நெருக்கமான உறவு கொண்டவர் என்பதையும் நிலைநாட்டுகிறார். என் மகன் தம் செயலையும் அதன் விளைவுகளையும் முழுமையாக அறிந்திருந்தார் எனினும் தம் சினத்தை வெளிப்படுத்த தயங்கவில்லை.

தொடரும்

# உமது மனத்திடனை வலுப்படுத்தும் ஆறு வழிகள்

பலவீனமான மனப்போக்கினை உடைய ஒருவர் வாழ்வில் குறிக்கோளற்றவராகவும் முடிவுகள் எடுக்க முடியாதவராகவும் வெற்றியின் மகிழ்ச்சியை அனுபவிக்க முடியாதவராகவும் இருப்பார். ஆயினும் மனத்திடன் எப்படி எமது வாழ்வில் செயல்படுகின்றது என்று அறிந்து அதை வளர்த்துக்கொண்டால் மேற்சொன்ன மனத்தின் பண்புகளை நாம் எமதாக்கிக் கொள்ளலாம். எனவே, ஒரு சில மனப்பாங்குகள் செயல்பாடுகளை ஆராய்வோம்.

### 1. நாளாந்த செயல்பாடுகளில் சுய–கட்டுப்பாட்டைக் கடைப்பிடியும்.

எமக்குப் பிரச்சினைகள் ஏற்படும்போது உறுதியான சுய கட்டுப்பாட்டுடனும் மனத்திடனுடனும் இருக்க வேண்டுமென்றால் சாதாரண நிகழ்வுகளில் அவற்றை செயல்படுத்த வேண்டும். எமக்கென்று சில வாழ்க்கைத் திட்டங்கள் அவசியம்.

நீர் அதிகம் புகைப்பிடிப்பவரென்றால் அதற்கு ஒரு சில வரையறைகளை வைக்கவேண்டும். இது எமக்கு நாமே வைக்கும் மீறமுடியாத வாக்குறுதிகள். இவ் வாக்குறுதிகளுக்கு ஏற்ப நடக்கும்போது நாம் எமது சுய மதிப்பை உயர்த்துகிறோம். இவ்வாறு வாக்குறுதிகளைப் காப்பாற்றி வாழும்போது அது நமது வாழ்வில் நீண்ட நன்மை பயக்கும்.

### 2. இலக்குகளை தெரிவுசெய்யும்போது "நடு நிலையை" பேணிக்கொள்ளும்.

எமது வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதில் இரண்டு சிக்கல்கள் உண்டு. ஒன்றில் எமது இலக்கை மிக எளிதாக்கலாம். அல்லது மிகக் கடுமையானதாக்கலாம். சரியான வழி நடுவழி - மிக எளிதானதோ, மிகக் கடுமையானதோ அல்ல. படிப்படியாக கடினமானவற்றைச் செயல்படுத்தலாம்.

உமது வாக்குறுதிகளை எழுதிவைத்து அவைகளை உமது மனதில் ஆழமாகப் பதிய வைப்பதற்காக அவற்றை சத்தமாகச் சொல்லவும்.

### 3. உமதுநல்லதீர்மானங்களைச்செயல்படுத்த கால எல்லையைக் குறிப்பிடவும்.

உதாரணமாக "நான் புகைப்பிடிக்கமாட்டேன்" என்று சொல்வதைவிட, "நான் ஒரு வாரத்திற்குப் புகைப்பிடிக்கமாட்டேன்" என்று சொல்லுவது எளிது, கிறிஸ்தவர்கள் தபசுகாலத்தில் ஒறுத்தல் முயற்சிகளைச் செய்கிறார்கள். ஒரு சிறிய வெற்றி இன்னுமொன்றில் வெற்றி காண்பதற்கான உற்சாகத்தையும், வலிமையையும், தன்நம்பிக்கையையும் கொடுக்கும். வெல்லமுடியாத பாரிய தடையைத் தாண்டுவதைவிட பல சிறிய வெற்றிகளை ஈட்டுவது எளிது.

### 4. ஒழுங்கின் பெறுமதியை உணர்ந்து–கொள்ளும்.

ஒவ்வொரு நாளும் பத்து நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வது, இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை ஒரு மணிநேரம் உடற்பயிற்சி செய்வதைவிட மேலானது. வழியோரக் கனவுகளில் மனத்தைப் பறிகொடுக்காமல் செய்யும் செயலில் முழுக்கவனத்தையும் செலுத்தவேண்டும். (உதாரணம் பூதக்கண்ணாடி, லேசர்) ஒழுங்குக் கிரமமான முயற்சியானது நாளாந்த பயிற்சி, குறிப்பிட்ட இடம், நேரம், ஒழுங்குமுறை என்பவற்றை உள்ளடக்கும். இந்தப் பழக்கமுறை மிகவும் முக்கியமானதொன்று.

### 5. செயல்பாடுதான் முக்கியம் என்பதை நினை–வில் வைத்துக்கொள்ளவும்.

சரியான எண்ணங்கள் எவ்வளவுக்கு முக்கியமோ அதைவிட சரியான செயல் முக்கியமானது. ஒரு கொள்கை எம்மைத் தூண்டும்போது அதை உடனே செய்ய வேண்டும். உதாரணமாக எமது தீர்மானங்களை எழுதி வைக்கவேண்டுமென்று முன்னர் பார்த்தோம். இதுவரை ஏதாவது தீர்மானத்தை எழுதியுள்ளீரா? இல்லையென்றால் இப்பொழுதே எழுதும். ஒன்றே செய், அதை நன்றே செய், அதை இன்றே செய்.



### 6. இறுதி ஆர்வத்தின் முக்கியத்துவத்தை மனதில் பதித்துக் கொள்ளும்.

ஓட்டப்பந்தயத்தில் பங்குபற்றும் வீரர்கள் இறுதி ஆர்வத்தைப் பயன்படுத்தி வெற்றியீட்டுவதை நாம் பார்த்திருக்கிறோம். அவர்களுள் தேங்கியிருக்கும் சக்தி இவ்வாறு இறுதி நேரத்தில் முழுமூச்சுடன் ஓட வழிவகுக்கிறது. இப்படியான செயல்பாட்டுக்கு மனமும் ஒரு காரணம். நாம் ஒரு செயலைக் "கைவிடுபவர்" என்பதைவிட "கடுமையாக உழைப்பவர்" என்பதை அறிந்திருப்பது எமது சுயமதிப்பை வளர்க்கப் பெரிதும் உதவும். இந்த இறுதி ஆர்வம் உமது எல்லாச் சக்திகளையும் ஒன்று சேர்க்க உளவியல் ரீதியான உந்துதலைக் கொடுக்கிறது. மற்றவர்கள் ஒரு முயற்சியைக் கைவிடும்போதும் நீர் உமது மனத்திடனை நிரூபிக்க இது ஓர் அரிய வாய்ப்பல்லவா?

அருட்பணி. றெஜிஸ் இராஜநாயகம்.



# அருள் பணியாளர்களுக்கு திருத்தந்தையின் தவக்கால உரை

அருள்பணியாளர்களின் உள்ளங்களில் ஓர் ஒட்டுண்ணியாகவோ, புல்லுருவியாகவோ இருப்பது அவர்களின் உள்ளங்களில் எழும் கசப்புணர்வுகள். இந்த கசப்புணர்வுகள் அவர்களின் மகிழ்வை உறிஞ்சி எடுத்து விடுகின்றன. என்ற கருத்தில் கடந்த மாதம் 27ம் திகதி வியாழனன்று உரோமை நகரில் பணி-யாற்றும் அருள்பணியாளர்களுக்கு தவக்கால உரையை வழங்கினார்.

### கசப்புணர்வுகளுக்கு மூன்று காரணங்கள்

ஒவ்வோர் அருள்பணியாளரின் உள்ளத்திலும் உருவாகும் கசப்புணர்விற்கு மூன்று காரணங்கள் உண்டு.

1. அவர்களது நம்பிக்கை வாழ்வில் எழும் பிரச்சினைகள்
2. ஆயர்களுடன் எழும் பிரச்சினைகள்
3. ஒருவர் ஒருவருடன் எழும் பிரச்சினைகள்

### 1. நம்பிக்கை வாழ்வால் எழும் கசப்பு

நமக்கு என்ன கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு, நம்பிக்கைக்கு மாறாக நமக்கு என்ன கிடைக்கும் என்ற கவலை இதனால் கசப்புணர்வு உருவாகிறது. இது அருள் பணியாளர்களுககு ஓர் எச்சரிக்கையாகும். ஆகவே இறைவனில் முழு நம்பிக்கையும் மகிழ்வையும் கண்டுக்கொள்ள நம்பிக்கை உணர்வை நாம் கொண்டிருக்க வேண்டும் என்று கூறினார்.

### 2. ஆயர்களுடன் எழும் பிரச்சினை

அதிகாரத்திலும், பொறுப்பிலும் இருப்பவர்கள், தவறுகள் செய்யக் கூடியவர்கள் என்பதை நாம் திரு அவையிலும் இவ்வுலகிலும் கண்டு வருகிறோம். கிறிஸ்துவே நமக்கு எல்லாமுமாகிறார் என்பதை முழுமையாக உணர்ந்து கொள்ள இயலாதபோது, நாமே அனைத்தும் என்ற எண்ணத்துடனும் பிறர் மீது சுமத்தும் சோதனைகள் தோன்றும்போதும் பொறுப்பில் இருப்பவர்களுக்கும், அவர்களுக்குக் கீழ் பணியாற்றுவோருக்கும் இடையே உரசல்கள் எழுகின்றன என்று தெளிவுப்படுத்தினார்.


### 3. அருள்பணியாளர்களுக்கு எழும் பிரச்சினைகள்

தன்னையே தனிமைப்படுத்திக் கொள்ளும் அருள்பணி யாளர்கள்; விரைவில் தங்கள் தனிமையைப் போக்க இவ்வுலகம் சொல்லித்தரும் வழிகளில் செல்ல முயல்கின்றனர். மற்றவர்களோடும் நம் நேரத்தையும், எண்ணங்களையும் பகிர்ந்துக்கொள்ளாமல் வாழ்வது. தனிமையாக இருப்பது, அலகையின் பிடியில் வாழ்வது பற்றி எச்சரித்தார் திருத்தந்தை.

இறைவன் மீதும், இறை மக்கள் மீதம், முழு நம்பிக்கை கொண்டு உறவுகளை மீண்டும் கட்டியெழுப்பும்போது இந்த கசப்புணர்வு இல்லாமல் போகிறது. கசப்புணர்வை வெல்லும் ஒரே வழி உறவுகளை கட்டியெழுப்புவதாகும் என உணர்தினார்.

திருத்தந்தையின் தவக்கால உரை எல்லா அருட்பணியாளர்களுக்கும் பொருந்தும்.

# பிரான்சிஸ், பெண்களின் திருத்தந்தை புதிய நூல்




இத்தாலியில் செய்தியாளராகப் பணியாற்றிவரும் Nina Fabrizio என்ற பெண்மணி, **பிரான்சிஸ், பெண்களின் திருத்தந்தை** என்ற பெயரில் ஒரு நூலை, புனித பவுல் பதிப்பகம் வெளியிடவுள்ளது.

இவ்வாண்டு மார்ச் மாதம், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் தலைமைப் பணியில் ஏழு ஆண்டுகளை நிறைவு செய்யும் வேளையில் வெளியாகவிருக்கும் இந்நூலில், திருஅவையில் பெண்களின் பங்கு குறித்து திருத்தந்தை வெளியிட்டிருக்கும் பல்வேறு எண்ணங்கள் இடம்பெற்றுள்ளன.


பெண்களை, அருள்பணியாளர்களாக திருநிலைப்ப-டுத்தப்படுதல், பெண் தியாக்கோன்கள் என்ற தலைப்புக்களில் திருத்தந்தையிடம், பல்வேறு தருணங்களில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அவர் தந்திருக்கும் விளக்கங்கள், மற்றும், திருப்பீடத்தின் உயர் பொறுப்புக்களில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பெண்களுக்கு வழங்கியுள்ள நியமனங்கள், ஆகியவை குறித்து Fabrizio அவர்கள் தன் எண்ணங்களைப் பகிர்ந்துள்ளார்.

திருஅவையில் பெண்களுக்கு வழங்கப்படக்கூடிய பொறுப்புக்கள், மனித வர்த்தகத்தில் பெண்கள் அடையும் துயரங்கள் ஆகியவை குறித்து பெண் செய்தியாளர்கள் திருத்தந்தையிடம் பல்வேறு பயணங்களில் எழுப்பியுள்ள கேள்விகளும், அவற்றிற்கு திருத்தந்தை வழங்கிய பதில்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.



வத்திக்கானிலிருந்து திருத்தந்தை

# நம் பாவ அறிக்கை, இதயத்தின் ஆழத்திலிருந்து எழ வேண்டும் – திருத்தந்தை.



நம் பாவங்களை அறிக்கையிட்டு, நாம் ஒப்புரவு அருளடையாளத்தை பெறும்போது நம் இதயத்தை ஆழமாக ஆய்வு செய்து, நம் பாவங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். **நம் பாவங்களை நினைத்து வெட்கப்படுவது நமக்கு அருளாக மாறுகின்றது.** இதுவே இறைவனின் இதயத்தைத் தொட்டு நமக்கு இரக்கத்தை பெற்றுத் தருகிறது என்றார்.

ஒப்புரவு அருளடையாளத்தை நாடிச் செல்லும்போது, நம் பாவ பட்டியலை மட்டும் எடுத்துரைத்தால் போதாது. நன்மைத்தனமும் இரக்கமும் நீதியும் நிறைந்த இறைவனிடம், **நம் பாவங்களினால் ஏற்படும் வெட்க உணர்வுகளையும் தெரிவிக்க வேண்டும்** என்று மேலும் கூறினார்.

# ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்...!

**வத்திக்கானிலிருந்து திருத்தந்தை பிரான்சிஸ்**

## ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது

என்று ஆண்டவர் மலைப்பொழிவில் முதலில் கற்பிப்பதை திருத்தந்தை விளக்கியுள்ளார்.

**மகிழ்ச்சியை அடைவதற்கான அவருடைய வழியை இயேசு ஒரு முரண்பாட்டுடன் தொடக்குகின்றார்.** ஏழ்மையை ஓர் ஆசீர்வாதமாக முழங்குவது பெரிய ஆச்சரியம். அபூர்வம். **நம்மையே ஏழைகளாக, பிச்சைக்காரர்களாக தம் உள்ளத்தின் ஆழத்தில் உணர்பவர்கள் தான் ஏழையரின் உள்ளத்தோர்.** இத்தகையோரை பேறுபெற்றோர் என இயேசு முழங்குகின்றார். விண்ணரசு இவர்களுக்கு உரியது' என்று எடுத்துரைக்கின்றார். நாம் எப்போதும் கேட்பது இதற்கு நேர் எதிரான கூற்றைத்தான். நமக்கென்று ஒரு பெயரை வகுத்துக்கொள்ள வேண்டும்... முக்கியமாக ஒரு நபராக இருக்க வேண்டும்... இவை உலகின் கூற்று. ஆனால் இவற்றிலிருந்துதான் தனிமையும், துயரமும் எழுகின்றன. ஏனெனில் இது என்னை மற்றவர்களுடன் போட்டியிடச் செய்கின்றது. என்னைப் பற்றியே எப்போதும் சிந்திக்கச் செய்கின்றது. நான் என்னுடைய ஏழ்மையை ஏற்றுக்கொள்ள மறுக்கும்போது என்னுடைய வலுவின்மையை நான் வெறுக்கின்றேன். ஏனெனில் என் வலுவின்மை நான் ஒரு முக்கியமான நபராக மாற ஒரு தடையாக இருக்கின்றது. ஒருவர் தம்மையே ஆய்ந்து பார்க்கும்போது அவர் எத்துணை பரப்பரப்பாக இருந்தாலும்கூட பெரிய வேலைகளைச் செய்து கொண்டிருந்தாலும் கூட அவர் தம்முடைய முற்றுப்பெறாத, எளிதில் விழக்கூடிய நிலையை நன்கு அறிவார். இவற்றை எந்த விதத்திலும் மறைக்க இயலாது. பெருமை நிறைந்தவர்கள் தம்முடைய இயலாமைகளை மறைக்க முற்படுகிறார்கள். யாருடைய உதவியையும் நாட மாட்டார்கள். அவர்களுக்கு உதவி தேவை. ஆயினும் கேட்க மறுப்பார்கள். குறிப்பாக மன்னிப்பு கேட்க மறுப்பார்கள். எத்தனையோ தம்பதியர் மத்தியில் இதை நாம் பார்க்கின்றோம். மன்னிப்புக் கேட்க மாட்டார்கள். அவர்கள் ஏழையின் உள்ளத்தோர் அல்லர்.

மன்னிப்பு கேட்பது நமக்கு அவமானமாக இருக்கலாம். ஆயினும் **நம் குறைகளையும், குற்றங்களையும் மறைத்து வாழ்வது பெரும் சுமையான ஒன்று. இயேசு கிறிஸ்து நமக்குச் சொல்வது ஏழையாக இருப்பதே ஒரு கிருபை என்று. ஏழையின் உள்ளத்தோராய் இருக்க நமக்கு உரிமை அளிக்கின்றார். ஏனெனில் இதுவே விண்ணரசிற்கான வழி.** இந்த உலகத்தின் அரசாங்கத்தை உடையவர்களிடம் பணம் இருக்கலாம். ஓய்வு இருக்கலாம். ஆயினும் அது நிலைப்பதில்லை என்று கூறும் திருத்தந்தை,

**விண்ணரசை நமதாக்கிக் கொள்ள ஏழையரின் உள்ளத்தோராய் வாழ நம்மை அழைக்கின்றார்!**

2010 - 2020 ஞான ஒளி GNANA OLI



475வது ஆண்டு நிறைவில்...

# மன்னார் மறைசாட்சிகள்

12

## மானிடவியல் கண்ணோட்டத்தில் சமூகவியல் வரலாறு....

### சரித்திர வரலாறு

வேத சாட்ச4களாக மரித்தனர் என்று கூறுகின்றனர் (Schurharmer: 1977: 472)

அன்றிக் அன்றிக்கஸ் அடிகளார் 1564 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 24ம் திகதி தூத்துக்குடியிலிருந்து எழுதிய கடிதத்தில் **மன்னார்த்தீவில் இரண்டு கரையார்** கிறிஸ்தவர்களுடைய பட்டணங்கள் உண்டு. போன வருடம் பெரிய கிராமத்தில் கொள்ளை நோய் ஏற்படவில்லை. சிறிய கிராமத்தில் இருக்கும் கிறிஸ்தவர்கள் நாங்கள் இத்தீவிற்குப் வருவதற்கு முன் குடியிருந்தவர்களாவர்˙ (Schurharmer: 1977: 471-472). எனவே பல விதமான கருத்துக்கள் கூறப்பட்டாலும் 16 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 18 ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்த இயேசு சபைக் குருக்கள் இந்தியாவின் கரையோரங்களிலும் மன்னார்த்தீவிலும் மாதோட்டம் யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் பணிபுரிந்த போது **கரையார்** என்ற ஒரு சமூகத்தவர்களைக் கண்டிருக்கின்றார்கள். இவர்கள் அந்நாட்களில் முத்துக்குளிப்போராகவும் மீன்பிடிப்போராகவும் கடற்பாதுகாப்புப் படையினராகவும் விவசாயம் செய்பவர்களாகவும் இருந்தனர்.

ஆகவே தனிநபர்களான பிரான்சீஸ் சவேரியார் என்ற திருத்தொண்டர் சாந்தக்குருஸ் மற்றும் இளஞ்சிங்க என்று மன்னார்த் தளபதியுடன் பரதவர் உட்பட கரையார் என்ற சமூகத்தவர்களே மன்னார்த்தீவில் வேதசாட்சிகளாக மரித்தவர்கள் எனக் கருத இடமுண்டு. ஏனெனில் கடையரைப் பரதவருடன் இணைத்துப் பார்க்க முடியாதுள்ளது. ஆனால் கரையாரைப் பரதவருடன் இணைத்துப்பார்க்கக் கூடியதாக உள்ளது. ஏனெனில் குருகுலத்தவர்கள் பரவருடைய அரசபரம்பரையினராகும். (Sivaratnam : 1978: 44). பெரிய கரையார் பட்டணம் மற்றும் சிறிய கரையார் பட்டணம் ஆகிய இடங்களில் வாழ்ந்தவர்கள் கரையார், பரதவர், கடையர் மற்றும் சங்கிலி மன்னனுக்கு முதல் ஆண்ட உண்மையான ஆரிய சக்கரவர்த்தி அரச பரம்பரையின் கடற் பாதுகாப்பு படைத்தளபதி இளஞ்சிங்கவின் தலைமையில் இருந்த யாழ்ப்பாண கரையாரும் (கடல் பாதுகாப்புப் படை ஆகும்)

## அத்தியாயம் : நான்கு

### மன்னார் கத்தோலிக்கரின் சாட்சிய மரணம் – ஓர் இறையியல் நோக்கு

கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றிலே காலத்திற்குக் காலம் பலர் வேதசாட்சிகளாக மரித்துள்ளார்கள். ஆதித் திருச்சபையின் ஆரம்ப காலத்திலே அப்போஸ்தலர்கள் இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பிற்கு சாட்சி பகர்ந்தனர். அதன்பின் பல விசுவாசிகளும் தொண்டர்களும் தமது உயிரைத் துச்சமென மதித்து உண்மை விசுவாசத்திற்காக தங்களையே அர்ப்பணித்தனர். இவர்களின் இந்த ஒப்பற்ற ஈடு இணையற்ற உயிர்த்தியாகத்தால் தாய் திருஅவை இன்று ஆலம்போல தளைத்து அறுகு போல் வேர் ஊன்றி விருட்சமாய் வளர்ந்து நிற்கின்றது. திருஅவையின் வளர்ச்சிக்கு உரமாகிப் போனவர்கள்தான் இந்த வேதசாட்சிகள். இந்த வகையில் மன்னார் கிறிஸ்தவர்களின் சாட்சிய மரணம் உலகத் திருச்சபைக்கும் குறிப்பாக இலங்கைத் திருச்சபைக்கும் வித்தாக அமைகின்றது. புனித பிரான்சீஸ் சவேரியார் இந்தியாவிலே கிறிஸ்தவ மறையைப் போதித்துக் கொண்டிருப்பதை அறிந்த மன்னார் மக்கள் தாமும் அந்தப் புதிய மறையை அதன் கொள்கைகளை விழுமியங்களை ஏற்றுக்கொள்ள விரும்பினார்கள். அதனால் புனித சவேரியாரைக் காணவும் அவருடைய போதனையைக் கேட்கவும் மிகவும் ஆர்வமாய் இருந்தார்கள். புனித சவேரியாருக்கு இந்தியாவிலே அதிக பணி காத்துக்கிடந்தமையால் ஏற்கனவே தனக்குப் பதிலாக பணிபுரியவென நியமிக்கப்பட்டிருந்த பிரான்சீஸ் சவேரியார் என்ற தனது நாமத்தைப் பூண்டிருந்த திருத்தொண்டரை மன்னார்த்தீவுக்கு அனுப்பினார். சத்திய மறையைப் பின்பற்ற மிகவும் ஆவலாகவும், ஆர்வமாகவும் இருந்த மன்னார் மக்கள் திருத்தொண்டர் பிரான்சீஸ் சவேரியாரை அன்புடன் வரவேற்று அவரது போதனையைக் கேட்டு விசுவசித்து அதனை ஏற்றுக் கொண்டனர். அவர் கத்தோலிக்க திருச்சபையின் முறைப்படி சரியான மறைக்கல்வியை அவர்களுக்குப் போதித்தார். விசுவசித்து சத்திய மறையை அதன் தார்ப்பரியங்களைப் புரிந்து ஏற்றுக் கொண்ட அனைவருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார். கத்தோலிக்க திருச்சபையின் சரியான சடங்கு முறைப்படி அவர்களுக்கு ஞானஸ்நானம் வழங்கப்பட்டது. இவ்வாறு பல நூற்றுக்கணக்கான மன்னார் மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு கிறிஸ்து - அவர்களாக மாறினார்கள்.

சைவ சமயத்தவர்களான மன்னார் மக்கள் கிறிஸ்தவ மதம் மாறியதுமல்லாது சைவ சமய வழிபாடுகள் சடங்கு சம்பிரதாயங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு உண்மைக் கிறிஸ்தவர்களாக கத்தோலிக்க விசுவாசத்தில் ஊறிவிட்டனர். கிறிஸ்தவ கொள்கைகளின் படியும் கிறிஸ்தவ விழுமியங்களின் படியும் வாழத் தொடங்கினர். இந்நிகழ்வு ஏனைய மக்களுக்கும் சைவக் குருக்களுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது. சைவக்குருக்கள் இதனைத் தமது அரசனுக்குத் தெரிவித்தனர். சைவக் குருக்கள் மூலம் இதனை அறிந்த யாழ்ப்பாண அரசன் சங்கிலியன் தனது தளபதி இளஞ்சிங்கையிடம் மக்களைக் கிறிஸ்தவ மறைக்குச் சேராது கட்டுப்படுத்தும் படி கேட்டான். ஆனால் இளஞ்சிங்கையும் அவனுடைய கடற்படை வீரர்களும் தமது குடும்பங்களுடன் கத்தோலிக்கராகிவிட்டதைக் கேள்விபட்டு ஆத்திரம் கொண்டு 5000 படைவீரர்களுடன் மன்னாருக்குச் சென்றான். இளஞ்சிங்கனும் அவனது கடற்படையினரும் (யாழ்ப்பாணக் கரையார்) ஆரியச்சக்கரவர்த்திகளின் உறவினர் அல்லது அவர்களின் அரசியல் நிர்வாகத்தில் பங்கு கொள்பவர்களாகும். சங்கிலியன் நேரடி அரசபரம்பரையில் இருந்து வராத படியால் அவ் அரசருக்கு முழுமையான ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை. இதன் காரணமாக அவர்களும் கத்தோலிக்கத் திருமறையை பின்பற்ற முன்வந்தனர். இவ்வாறு கத்தோலிக்க சத்திய மறையைத் தாமாகவே விரும்பி பின்பற்றிய மன்னார் வாழ் மக்கள் எதுவித எதிர்ப்பும் காட்டவில்லை.

தொடரும்.....

# இதோ ஆண்டவரின் அடிமை – ஆண்டவரின் பிறப்பு அறிவிப்பு

இந்தத்திருநாள் தொடக்கத்திலிருந்தே **மனித–வதாரத்தின் பெருவிழா** என்றும் **மீட்பின் தொடக்கம் எனவும், கிறிஸ்துவின் உற்பவம்** எனவும் பொருத்தமாக அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்தத் திருநாள் 430 ஆம் ஆண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகிற தென்பதிலிருந்து இதன் பெருமை புலனாகிறது. இந்தத் திருநாள் கொண்டாட்டத்தின் அதிதூதர் கபிரியேல் கன்னிமரியிடம் **கிறிஸ்து மனிதகுல மீட்பர், உம் வயிற்றில் கருவுற்றுத் தோன்றுவார்** என்ற மாபெரும் மகிழ்ச்சியான செய்தியை அறிவித்ததைக் கொண்டாடுகிறது. **இதோ ஆண்டவரின் அடிமை நான், உமது வார்த்தையின்படி ஆகட்டும்** என்று சொன்ன உடனே மரியாள் கருவுற்றார். 9 மாதங்கழித்து டிசம்பர் 25ல் கருவுற்ற குழந்தை உலகின் மீட்பராகப் பிறந்தது. இந்தப் புனித வரலாறு மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே ஹிப்போவிட்டாஸ் என்ற வரலாற்று ஆசிரியரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

மரியாவின் **ஆகட்டும்** என்ற சொல் எத்துணை ஆற்றல் வாய்ந்தது! **உண்டாகட்டும்** என்றார் எல்லாம் வல்லவர். **ஒளி உண்டாயிற்று. விண்ணும் மண்ணும் தோன்றுக** என்றார் புனித தாமஸ் வில்லனோவா.

**இறைவனின் தாயாகத் திகழ்வதைவிட மிக்க மேலான நிலையை இறைவன் ஏற்படுத்தி இருக்க இயலாது**

பங்குனி 25ம் திகதி



புனித பேர்னாடின் சியென்னா, **படைப்புகள் அனைத்தும் அமைதிகாத்து நடுக்கமுறட்டும். இறைவன் தூய கன்னியிடம் வருகின்றார். கன்னியின் மனிதத் தன்மையில் பங்கேற்கிறார். இந்த மகிமையை ஆழமாகச் சிந்தனை செய்வோம்".**

புனித பீட்டர் டேமியன், **இதோ ஆண்டவரின் அடிமை என்று நான் உதிர்த்த சொற்களை என்னிடம் யாரெல்லாம் நினைவூட்டுகிறார்களோ அவர்களுக்கு எப்போதும் நான் தாயாக இருந்து அவர்களின் தேவையை நிறைவுசெய்ய விரைந்து வருகிறேன்;** - மரியன்னை

**ஓர் அடிமையின் சாயலை இறைவன் எடுத்துக் கொண்டார்.** ஆனால் பாவ-மாசு அவரைத்தீண்டவில்லை. நமது மனிதத் தன்மைக்கும்பெருமை தேடித்தந்தார். அதனால் தமதுஇறைமகத்துவத்தைக் குறைத்துக் கொள்ளவில்லை. **அடிமையின் உருவெடுத்துத் தம்மை வெறுமையாக்கினார். இவ்வாறு மனித குடும்பத்தில் ஓர் உறுப்பினராகக்** காட்சியளிதார்

இந்நிலை அவரது பரிவிரக்கத்தைக் காட்டுகிற தேயன்றி, அவரது வலிமையை இழந்துவிட்டார் என்று குறிப்பதில்லை. இவ்வாறு, மனிதனை உண்டாக்கிய அவரே, **அடிமையின் உருவத்தில் மனிதனாக உண்டாக்கப்பட்டார். தெய்வீக மகத்துவத்திலிருந்து இறங்கி நம்மிடையே வருகின்றார்.** உண்மையிலேயே கடவுளானவர், உண்மையாகவே மனுவுரு எடுத்தார்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

06



# கொழும்பு கொச்சிக்கடை தூய அந்தோனியார் திருத்தல வரலாறு

## ஆலயம் அறிவோம்...

காரணம் திருச்சுரூபம் அங்கு கொண்டு செல்லப்படும்போது இங்கு திருச்சுரூபக் கூடு வெறுமையாக இருக்கும். இதன் காரணமாக இந்தியாவில் இருந்து ஐந்தடி உயரமான திருச்சுரூபம் ஒன்றைக்கொண்டு வந்து சுற்றுப்பிரகாரத்திற்குப் பயன்படுத்துவதற்கென மட்டும் வைத்துள்ளனர்.

1984ல் அருட்பணி. J. J. இம்மானுவேல் அடிகளார் பணிபுரிந்த காலத்தில் இலங்கை அரசாங்கத்தினால் ஒரு துண்டுக் காணி ஆலயத்திற்கு வழங்கப்பட்டு அதில் இரண்டு மாடிக் கட்டிடம் கட்டப்பட்டது.

1989ம் ஆண்டு தூய அந்தோனியாரின் சுரூபத்திற்கென மரத்தினால் அமைக்கப்பட்டிருந்த கூடு அகற்றப்பட்டு பளிங்குக் கற்களினால் ஆன கூடு அமைக்கப்பபட்டது.

அற்புதங்கள் புரியும் திருச்சுரூபம் குண்டு துளைக்க முடியாத கண்ணாடியினால் பாதுகாக்கப்படுகின்றமையானது மிக முக்கியமான அம்சமாகக் கொள்ளலாம். 1990ம் ஆண்டு இவ்வாலயம் தேசிய திருத்தலமாக பிரகடனப்படுத்தப்பட்டது. மும்மொழிகளிலுமான வழிபாட்டு முறை இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்துடன் முதலாவது நிர்வாக அருட்தந்தையாக அருட்பணி சுனில் குமார் பீரிஸ் அடிகள், உதவி நிர்வாக அருட்பணி ஆனந்தன் பர்னாந்து புள்ளே அடிகளாரும் அவரைத் தொடர்ந்து அருள்பணி. மனோகுமாரன் நாகரட்னம் அடிகளாரும் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் பணிபுரிந்த காலத்தில் 1995ம் ஆண்டு தை மாதம் 20ம் திகதி திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் யோசவ்வாஸ் அடிகளாரை அருளாளர் நிலைக்கு உயர்த்தும் சடங்கிற்கு வந்தபோது கட்டுநாயக்காவில் இருந்து கொட்டாஞ்சேனையைக் கடந்து திறந்த ஊர்தியில் வருகின்றபோது தூய அந்தோனியார் திருத்தல மணி ஒலியைக் கேட்டு திருத்தலத்திற்குள் சென்று சற்று இளைப்பாற விரும்பினார். இந்த எதிர்பாராத விஜயம் மிக முக்கியமான வரலாற்று நிகழ்வாகக் கருதப்படுகின்றது. அவரை தொடர்ந்து அருட் தந்தை ஹயசிந் பெரேராவும் அவரை தொடர்ந்து அருட்தந்தை கிளமன்ட் ரொசைரோ அடிகளாரும் உதவி நிர்வாக தந்தையர்கள் அருட்பணி ஜூட் லக்சான் அடிகள், அருட்பணி றோசான் அடிகளாரும் பணியாற்றினர். தற்போது நிர்வாக அருட்தந்தையாக ஜூட் ராஜ் பர்னாந்து அடிகளாரும் உதவி நிர்வாகியாக அருட்தந்தை ஷாமர பெரேரா அடிகளாரும் பொறுப்பேற்று நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

2019ம் ஆண்டு சித்திரை மாதம் 21ம்திகதி பாஸ்கு ஞாயிறு உயிர்ப்பு திருவிழா திருப்பலி தமிழில் காலை 8.00 மணிக்கு அருட்பணி ஜோய் மரியரட்ணம் அடிகளாரினால் ஒப்புக்கொடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும போது திருமுழுக்கு வாக்குறுதி நிறைவில் காலை 8.45 மணியளவில் நாசகாரர்களால் தற்கொலை குண்டுதாக்குதல் செய்யப்பட்டது. 56க்கும் அதிகமான உயிர்கள் காவு கொள்ளப்பட்டு பலர் படுகாயமடைந்தும் ஊனமுற்றும் இன்று வரை வாழ்கின்றனர். பொதுவாக புனித அந்தோனியார் ஆலய திருப்பலிகளில் வெளிப்பங்கைச் சார்ந்தவர்கள் பங்குகொள்வது வழக்கம். ஆலய சுற்றுப்புறத்தார் அநேகமானவர் ஆலயத்திற்குள்ளேயே சென்று அமர்திடுவர். வெளிபங்கிலிருந்து வருபவர்கள் இருக்கையின் பின்புறமாக நின்றுக்கொண்டிருப்பர். அதனால் பின்புறத்தில் சனநெருக்கடியாக இருந்ததால் குண்டுதாரி ஆலயத்திற்குள் செல்லமுடியாமல் பின்புறத்திலேயே தன்னை வெடிக்க வைத்தான். அதனால் ஆலய சுற்றுவட்டாரத்தில் வாழ்ந்தவர்கள் அதிகமாக காயப்பட்டும், வெளி பங்கைச் சார்ந்தவர்கள் அதிகமாக இறந்தும், காயப்பட்டும் உள்ளனர். பாடல் குழாமில் உள்ளவர்கள் உள அதிர்ச்சிக்கு ஆளானார்கள். காலப்போக்கில் நலமடைந்தனர்.

**உயிர்த்த ஞாயிறு அன்று மரணமடைந்தவர்களை வேத சாட்சிகளாக்க ஆலோசிக்கப்படுகிறது!**

### கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் பணியாற்றிய குருக்கள்

கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் நியமிக்கப்படும் உதவி பங்குத் தந்தையர்களில் ஒருவர் புனித அந்தோனியார் ஆலயத்தில் தமிழ் வழிப்பாடுகளை மேற்கொள்ள நியமிக்கப்படுவது வழக்கம். இதன்படி 1965 - 1989 வரை திருத்தலமாக பிரகடனப்படுத்தப்படும் வரை கீழே தரப்பட்டுள்ள அருட்பணியாளர்கள் தமிழ் மொழியில் வழிபாடுகளை நடத்தினார்கள். அவர்கள் பணிபுரிந்த வருடங்கள் இங்கு தரப்படவில்லை. ஆயினும் அவர்களின் பெயர்கள் மாத்திரம் தரப்பட்டுள்ளன. இப்பெயர்கள் வரிசைப் படியும் அமையவில்லை என்பதை தாழ்மையுடன் தெரிவிக்கிறோம்.

அருட்பணி ஆபிரகாம் OMI
அருட்பணி P.P. பிலிப் OMI
அருட்பணி ஏற்றியன் ஜோசப் OMI
அருட்பணி பிலிப் சிங்கராயர் OMI
அருட்பணி பொஸ்கோ பெரேரா OMI
அருட்பணி மார்கஸ் ஆனந்தப் புள்ளே OMI
அருட்பணி பொனிப்பஸ் பஸ்டியன் OMI
அருட்பணி மோர்வின்லோ OMI
மறைமாவட்ட குருக்களான
அருட்பணி எட்வட் றவல் புள்ளே
அருட்பணி ஜே. ஜே. இம்மானுவேல்
அருட்பணி இம்மானுவேல் படலிஸ்
அருட்பணி சிஸ்டஸ் குருகுல சூரிய.
அருட்பணி மொறிஸ் பெரேரா.

தொடரும்

சென்ற இதழ் தொடர்ச்சி...

# நீரிழிவு நோய்



இன்று குழந்தைகளுக்கும் சர்க்கரை நோய் அதிகமாக இருப்பதை காண முடிகிறது. இதற்கு உடல் உழைப்பு குறைந்த, எந்திரமயமான வாழ்க்கை முறை, அதிக உடல் எடை, அதிக கொழுப்புள்ள துரித உணவுகளை உட்கொள்வது, தொலைக்காட்சி முன்பு உட்கார்ந்து பொழுதைப் போக்குவது, கைபேசியில் தொடர்ந்து பேசுவது...

ஆகியவை முக்கிய காரணங்களாகும்.

இதைத்தவிர ஊட்டச்சத்து குறைபாடுள்ள கர்ப்பிணிப் பெண்கள், கருவுற்று இருக்கும்போது தேவையில்லாத மாத்திரைகளைச் சாப்பிடுவது, குழந்தைகளுக்கு சர்க்கரை நோய் வர காரணமாகின்றன. சர்க்கரை நோய் உள்ள பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகளில் 25 பேரில் ஒரு குழந்தை சர்க்கரைநோய் உள்ள குழந்தையாக பிறக்கிறது என்றும் பெண்ணின் வயது 25க்கு மேல் இருந்தால் 100க்கு 1 குழந்தை சர்க்கரை நோயினால் பாதிக்கப்படுகிறது என்றும் ஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன. அதிக தாகம், அதிக பசி, அதிகமாக சிறுநீர் பிரிதல், எடை குறைவு, உடல் பலவீனம், சிறுநீர் தாரையில் அரிப்பு, கண்பார்வை மங்குதல், ஆண்மைக் குறைவு, ஆறாத புண் போன்றவை சர்க்கரை நோயின் பல்வேறு அறிகுறிகளாகும்.

இரத்தத்தில் சர்க்கரையின்

அளவை காலை வெறும் வயிற்றிலும், சாப்பிட்டு 2 மணி நேரத்திற்கு

பிறகு பரிசோதனை செய்து கொள்ளலாம். சாப்பிடுவதற்கு முன் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு 126 மி. கிராமும் சாப்பிட்டு 2 மணி நேரம் கழித்த பின் 160க்கு மேலிருந்தால் சர்க்கரை நோய் இருப்பதாக கூறலாம். சர்க்கரை நோயை கட்டுப்படுத்த உணவு கட்டுப்பாடும் உடற் பயிற்சியும் அவசியம் மன அழுத்தம் குறைய யோகா, தியானப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். மற்றும் மருத்துவ ஆலோசனைப்படி மருந்துகளை முறையாக பயன்படுத்த வேண்டும்.

சர்க்கரையை முறையாக கட்டுப்படுத்தவில்லை என்றால் இதயம், கண், சிறுநீரகம், நரம்புகள் பாதிக்கப்படுவதுடன், கால்களில் உள்ள மெல்லிய இரத்தக் குழாய்கள் பாதிப்படைவதால் போதுமான இரத்த ஓட்டம் இருக்காது. மேலும், நரம்புகள் பாதிக்கப்படுவதால்

உணர்ச்சிகளை உணர முடியாது. இதனால் காயம் ஏற்பட்டால் நமக்குத் தெரிவதும்இல்லை. எளிதில் புண் ஆறுவதும் இல்லை. மேலும் கால் சதை பலவீனத்தினால் கால் தோல் தடித்து கரடு முரடாக தெரியும். கால் பாதங்களில் அதிக அழுத்தம் ஏற்பட்டு கால் தோல் தடித்து கரடுமுரடாக தெரியும். கால் தசைகள் வலுவிழந்து தடுமாறி விழுந்து எலும்பு முறிவு ஏற்பட வாய்ப்பு அதிகம். சர்க்கரை அளவு அதிகமாக இருப்பதால் கிருமிகள் வளரும் சூழல் ஏற்படுகிறது. இதனால் சர்க்கரை நோயாளிகளில் சராசரியாக 90 சதவிகிதம்பேர் காலில் கிருமித் தொற்றால் பாதிக்கப்படுகிறார்கள். அதில் 10 சதவிகிதத்தினருக்கு தொற்று வேகமாகப் பரவுகிறது. 4 சதவிகிதத்தினருக்கு காலையே அகற்றும்நிலை ஏற்படுகிறது.

**காலை பாதுகாக்கும் முறை:**

பாதங்களில் தொற்று ஏற்பட வாய்ப்பு ஏற்படாதவாறு எப்போதும்காலணி அணிந்து செல்ல வேண்டும். பாதங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள தினமும் வெதுவெதுப்பான நீரில் கழுவி சுத்தம்செய்து பராமரிக்க வேண்டும். காலுக்கு பொருத்தமான காலணிகளை அணிவது அவசியம். மாதம் ஒருமுறை மருத்துவரைச் சந்தித்து ஆலோசனை பெறுவது நல்லது. சர்க்கரைநோய் உள்ளவர்கள் வருடம் ஒரு முறை தவறாமல் கண் பரிசோதனை, சிறுநீரகம் சம்பந்தப்பட்ட பரிசோதனை, இதயப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். மூன்று மாதத்திற்கு ஒருமுறை சிறுநீரகத்தில் புரதம் வெளியாகிறதா? என்றும், இரத்தத்தில் யூரியா, கிரியாடனின் பரிசோதனை செய்து சிறுநீரகச் செயல்பாட்டை அறிய வேண்டும். உடலில் உள்ள அனைத்து உறுப்புகளையும் பாதிக்கக்கூடியது சர்க்கரை நோய்.

நீரிழிவு நோய் உள்ள குடும்பத்தார் அனைவரும் அடிக்கடி இரத்தத்தில் சர்க்கரையின் அளவைப்பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இதனால் ஆரம்பத்திலேயே சர்க்கரை நோயைக் கண்டுபிடித்து உரிய சிகிச்சை பெற முடியும்.

## 01 கச்சதீவு புனித...

குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார், இந்தியா சிவகங்கை மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை லூர்துராஜா, தஞ்சாவூர் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் மற்றும் இலங்கை இந்திய குருக்கள் இணைத்து கூட்டுத்-திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். இந்நிகழ்வில் இந்திய துணைத்தூதுவர் பாலசுப்ரமணியம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன், நெடுந்தீவு பிரதேச செயலாளர் எவ். சி.சத்தியசோதி யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட், முப்படைகளின் தளபதி றியல் அட்மிரல் ரவி விஜயகுணரத்ன, யாழ்ப்பாணம் மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் றுவன் வணிகசூரிய, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மேலும் 7,000 பக்தர்கள் பங்கேற்புடன் வெகு சிறப்பாக கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா திருப்பலி இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 01 அருட்பணியாளர்கள்...

தலைமையில் நடைபெற்றது. இறையியல் கல்லூரியில் 25 வருடங்களாக விரிவுரையாற்றிய அருட்பணியாளர்களை கௌரவிக்கும் முகமாக நடைபெற்ற இந்நிகழ்வில் அருட்பணி. பெற்றிக் பெரேரா, அருட்பணி. சிசில் ஜோய், அருட்பணி தயா செல்டன், அருட்பணி. ஹென்றி சில்வா, அருட்பணி. அன்தனி பர்னாந்து புள்ளே, அருட்பணி. ஜயலக் பலகல்ல, அருட்பணி. றீட் செல்டன், அருட்பணி.லெஸ்லி பர்னாந்து ஆகிய அருட்பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். இறையியல் கல்லூரியின் வேந்தர் அருட்பணி. ஷெரோன் டயஸ் அடிகளாரினால் ஒழுங்கமைக்கப்பட்டது.

## 13 இதோ ஆண்டவரின்...

இந்த ஒருங்கிணைப்பில் ஏமாற்றம் எதுவும் இல்லை இன்றைய திருத்தம் பெற்ற **பிரிவியரி** வாசகத்தில் புனித பெரிய சிங்கராயர் எழுதிய மடல்களிலிருந்து இப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

**செயல்பாட்டுக்கு:**

இம்மாபெரும் நிகழ்சியை நினைவு கூறும் வேளையில், ஆண்டாண்டு காலமாக இருந்து வந்த திரிகால ஜெபபக்தி குறைந்துவிட்டது வருந்தத்தக்கது. நாமாகிலும் ஆழ்ந்த விசுவாசத்துடன் இந்த ஞான முயற்சியைப் புதுப்பிப்போம்.

## 09 இத்தகொட...

தேடி அணுகினார்கள். இக்காரணத்தினால் பல குடும்பங்கள் அவர்களோடு சேர்ந்தது கவலைக்குரிய விடயமாகும். 1998ம் ஆண்டளவில் கத்தோலிக்க மக்களுக்காக கொடுக்கப்பட்ட அவ்சிற்றாலயமானது பழைமையின் காரணமாக சிதைவடையத் தொடங்கியதும் கவலைக்குரிய விடயமாகும். காலச் செல்லச் செல்ல இத்தோட்ட மக்களின் ஆன்மீக வாழ்வின் அவசியம் பற்றியும் இவ் மக்களின் நிலைமை பற்றியும் மத்துகம பங்கிலிருந்து சென்ற அனைத்து அருட்தந்தையர்களும் ஆயர் இல்லத்திற்கு தெரிவித்திருந்தார்கள். இதன் அடிப்படையில் இம்மக்களின் இறைத் தாகத்தை தணிப்பதற்காக இம்மக்களின் மொழியிலே ஆன்மீக காரியங்களை நிறைவேற்றுவதற்காகவும் இவர்களை தொடர்ச்சியாக அணுகுவதற்காகவும் பேராயரினால் தமிழ் அப்போஸ்தலிக்க பணியகம் உருவாக்கப்பட்டு பணிகளை மேற்கொள்ளுவதற்தாக அருட்தந்தை கலனபீரிஸ் நியமிக்கப்பட்டார். இப்பணியகத்தின் ஊடாக இவ் தோட்ட மக்கள் தரிசிக்கப்பட்டதோடு பலவிதமான ஆன்மீக நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டு, கல்வி, பொருளாதார உதவிகளும் வழங்கப்பட்டது. அத்தோடு மத்துகம பங்கிலே ஞாயிறு திருப்பலிகள் 3 வாரங்கள் இடம்பெற்றது. தமிழ் மொழியிலான ஞாயிறு திருப்பலிகளும் ஏனைய ஆன்மீக காரியங்களும் தோட்ட மக்களை இறைவன் பால் ஈர்ப்பதற்கு பெரும் உதவியாக இருந்தது. இந்நகர்வுகளானது பேராயரின் அனுமதியோடு மேற்கொள்ளப்பட்டதோடு தோட்டங்களில் சிற்றாலயம் அமைக்கவும் புனரமைக்கப்படவும் கர்தினால் ஆலோசனை முன் வைக்கப்பட்டது.

சிலுவை குருசு அமைந்துள்ள இடத்தில் பலமுறை கிறிஸ்தவ அடிப்படை வாத குழுவினால் சிற்றாலயம் அமைப்பதற்கென ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் அதிஷ்டவசமாக அவர்களுடைய முயற்சிகள் கைகூடவில்லை. 2000ம் ஆண்டளவில் கிட்டத்தட்ட 6 குடும்பங்களே கத்தோலிக்க குடும்பங்களாக இருந்து வந்துள்ளது. 2012ம் ஆண்டிற்கு பிற்பட்ட காலத்தில் தமிழ் அர்போஸ்தலிக்க செயற்பாடுகளோடு கத்தோலிக்க குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. தற்போது 18 கத்தோலிக்க குடும்பங்கள் இத்தோட்டத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் கத்தோலிக்க பணியகத்தின் ஆன்மீக நிகழ்ச்சிகளை மேற்கொள்வதற்காக அருட்தந்-தை கலன அடிகளார், அருட்தந்தை தேவசீலன் cmf அடிகளார், அருட்தந்தை ஒனாசிஸ் அடிகளார் பலதடவைகள் இத்தோட்டத்தை தரிசித்து திருப்பலி, சிலுவைப்பாதை, நத்தார் நிகழ்ச்சிகள், குடும்பம் ஒன்று கூடல்கள். மேலும் பல நிகழ்ச்சிகள் இம் மக்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டது. இவ்வாறாக இம்மக்கள் ஒன்று கூடும்போது ஆலயம் கட்டுவதற்காக ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டு அதற்கான அனுமதியையும் தோட்ட நிர்வாகத்தினரிடம் மக்கள் பெற்றுக்கொண்டு புனித மிக்கேலுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சிற்றாலயத்தை அன்னை வேளாங்கண்ணியின் பெயரிலே புதிய ஆலயத்தை கட்டியெழுப்ப பங்குத்தந்தையின் அனுமதியோடு தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் 2018ம் ஆண்டு சித்திரை மாதம் 26ம் திகதி புதிய ஆலயத்திற்காக அடிக்கல் நாட்டப்பட்டு அவ்விடத்திலே வைகாசி மாதம் 10ம் திகதி அன்னை வேளாங்கண்ணி திருச்சுரூபம் நிறுவப்பட்டது. 2018ம் ஆண்டு புரட்டாதி மாதம் 8ம் திகதி அன்னை மரியாளின் பிறந்த தினத்தன்று அன்னை வேளாங்கண்ணி திருவிழாவை முதன் முறையாக விமரிசையாக கொண்டாடப்பட்டது.

அன்னை வேளாங்கண்ணி சுரூபம் நிறுவப்பட்ட நாளிலிருந்து ஒவ்வொரு வியாழனும் மக்கள் ஒன்று சேர்ந்து பால்பொங்கி செபமாலை சொல்லும் நிகழ்வு இடம்பெறுகின்றது. இவ்விடத்திலே பலர் அன்னை வேளாங்கண்ணித்தாயின் புதுமைகளை உணர்வதாக சான்று பகர்கின்றார்கள். இப்பகுதியில் வாழக்கூடிய இந்து மக்களும் வேளாங்கண்ணி பக்தி முயற்சி மேற்கொள்வதோடு, தம் வாழ்விலும் பல அற்புதங்களை காணுவதாகவும் சான்று பகர்கின்றார்கள். இவ்வாலயமானது அருட்தந்தையர்களின் வழிகாட்-டலின் மூலமும், இத்தோட்ட மக்களின் அயராத முயற்சிகளினாலும் பல நல் உள்ளங்களின் உதவியாலும் பிற சமயத்தினரின் உதவியாலும் இரு ஆண்டுகள் என்னும் குறுகிய காலப்பகுதிற்குள் ஆலயமானது முழுமையான தோற்றத்துடன் காட்சி அளிப்பது சிறப்பு அம்சமாகும்.

ஆலயத்தின் இறுதிக் கட்டுமானப்பணிகள் தற்போதைய பங்குத்தந்தை அருட்தந்தை உதயதாஸ் அடிகளாரின் தலைமையில் மேற்கொள்ளப்படுவதோடு இவ்வருடம் (2020) சித்திரை மாதம் 18ம் திகதி இவ்வாலயமானது கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. ஜே.டீ. அந்தனி ஆண்டகையினால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்படும்.

எமது விசுவாச வாழ்வில் எமக்கு பலவகைகளிலும் எமக்கு உதவிசெய்த முன்னைநாள் பங்குத்தந்தையர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், தோட்டப் பொறுப்பு அதிகாரிகள், மூத்தோர்கள் எல்லோரையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

**இயேசுவிற்கே புகழ், மரியே வாழ்க**

**அன்னை வேளாங்கண்ணித் தாயே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.**

## 09 நாசரேத்து...

உடலும் முக்கியம்" என்று கற்பித்தார் (மத். 6: 24...) மேலும், மலர்கள், மரங்கள், பறவைகள், கால்நடைகள், ஊர்வன, நீந்துவன ஆறுகள், வெள்ளம், என்பன இயேசுவின் படிப்பினையில் இறையரசின் செய்தியை மக்களுக்கு அளித்திட அவர் பயன்படுத்திய ஊடகங்களாகும் (மத். 7: 9-11, 22; 8:20; 13:18-34; 18: 10-13; 21: 18-22; யோவா. 4:7-15; 6:32-35; 7: 37-39). இன்னும் தமது இறை இயல்பை விளக்கவும், உணர்த்தவும் இயற்கையில் உள்ளவற்றையே பயன்படுத்தினார் (யோவா. 12:24 கோதுமை விதை; யோவா. 15:1... திராட்சைக் கொடியும் அதன் கிளைகளும்; யோவா. 8:14... இருளை அகற்றும் ஒளி). **இயற்கையைப் புறக்கணித்து, புறந்தள்ளிவிட்டு ஆன்மீக வாழ்வு என்பது முயற்கொம்பாகலாம்** என்பது இயேசுவின் ஆன்மீகம் உணர்த்தும் உண்மையாகும். அங்குதான் இறைவனின் ஆவி ஊசலாடிக்கொண்டிருந்தார் (தொநூ. 1: 2-3). இன்றும் அனைத்தையும் முழுமையை நோக்கி வழிநடத்திக் கொண்டிருக்கிறார் (உரோ. 8:18...).

### செபத்தில் இயேசு பெற்ற ஆன்மீகம்

**"தந்தையே, உமது அரசு வருக!" என செபிக்கச் சொன்னார். மன்னித்து புது உறவுகள் வளர வாய்ப்பளிக்கச் சொன்னார்.** ஏன்? இயேசுவின் ஆன்மீகம் மக்கள் மையங்கொண்டதாகும். அவரது ஆன்மீகம் தாம் வாழும் சுற்றத்தில் இறைவனுக்குப் பிரியமான மக்களையும், மக்கள் வாழ்வையும் உருவாக்குவதாகும். அதற்காகவே இறைவன் விரும்பும் சமூகத்தை உருவாக்க தடையான சமூக, சமய, கலாச்சார அமைப்புக்களுடன் மோதினார் இயேசு. இவ்வமைப்புக்களுள் முடக்கப்பட்டிருந்த மக்களை விடுவிக்கவே மோதினார். ஆதனால், கடவுள் தனி மனிதரையும், தம் மானிட சமூகத்தையும் இட்டுச் செல்லும் எதிர்காலத்துக்கு மக்களை இட்டுச் செல்ல முயன்றார். இது இயேசுவின் ஆன்மீகத்தின் இன்னுமோர் வெளிப்பாடாகும். **இக்கட்டான, இறுக்கமான வேளைகளிலும் கடவுளுக்கு மட்டும் செவிசாய்த்து, கீழ்ப்படிந்து, பயணிப்பதே அவரது ஆன்மீகமாகும்** (எபி. 5: 7-8). எனவே, தனிமையில், அதிகாலையில் இயேசு செபித்தார். அவரது தனிச் செபத்தின் வழியாக தந்தையின் விருப்பை அறிந்து, அவரது திருப்பணியின் தன்மை பற்றி தெளிவு பெற்றார். தாம் பெற்ற ஆன்மீக அனுபவத்தை தம்மில் விசுவாசம் கொள்ளுவோரும் பெற்று பேறு பெற்றிட, அவர்களையும் செபிக்க அழைத்தார் இயேசு. "உங்கள் உள்ளறைக்குள் மறைவாய் உள்ள தந்தையை நோக்கி வேண்டுங்கள்" (மத். 6: 5-9) என்றும், "உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்புக் கேற்ப உள்ளத்தில் வழிபடுவர். தம்மை வழிபடுவோர் இத்தகையோராய் இருக்கவே தந்தை விரும்புகிறார்..." (யோவா. 4: 20 - 24) என்றும் இறைவனை வேண்டலின் ஆற்றலையும், தன்மையையும் கற்பித்தார்.

### நிலைவாழ்வு தரும் இயேசுவின் ஆன்மீகம்

இயேசு இறை ஆவிக்கு திறந்த உள்ளத்துடன் இறை விருப்பையே நாடித் தேடி வாழ்ந்ததால். **இயேசுவே 'நிறை வாழ்வை' அளிக்கும் ஊற்றாகின்றார்.** அதனால்தான், "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது; **நான் கொடுக்கும் தண்ணீர் அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும்"** என்று சமாரியப் பெண்ணிடம் சொன்னார். (யோவா. 4: 14). **ஆவியாரே வாழ்வு தரும் தண்ணீர்** என்பதை திருவிழாவின் இறுதியான பெருநாளில் இயேசு "யாரேனும் தாகமாய் இருந்தால் என்னிடம் வரட்டும்; என்னிடம் நம்பிக்கை கொள்வோர் பருகட்டும்" என்று உரத்த குரலில் சொன்னார். தம்மிடம் நம்பிக்கை கொண்டிருப்போர் பெறப்போகும் தூய ஆவியைக் குறித்தே அவர் இவ்வாறு சொன்னார் என்று நற்செய்தியாளர் யோவான் தெளிவுபடுத்துகிறார் (யோவா. 7: 37 - 39). இயேசு சிலுவையில் தம் உயிரைக் கையளித்தபோது இதுவே நடந்தேறியதாக மேலும் யோவான் உறுதிசெய்கிறார் (யோவா. 19: 34 - 35). இவ்வாறு, **இறை ஆவியில் வாழ்ந்து, தம் மக்களை இறை மக்களாக வாழ வழியான இயேசு, நம்பிக்கை கொண்டவருக்கு "நிலை வாழ்வை அளிக்கும் ஊற்றானார்".**

இயேசுவின் ஆன்மீகம் வாழ்வளிக்கும் கடவுள் நம் சூழலில் நம்மோடு குடியிருப்பவர் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது. நம்மைச் சூழவுள்ளவை, நம் வாழ்க்கைச் சம்பவங்கள் வழியாக அவர் நம்மோடு உரையாடிக் கொண்டிருக்கிறார் என்ற திடத்தையளிக்கிறது. இயேசு-வைப்போல இயற்கையில், நம்மவரின் வாழ்க்கை அனுபவங்களில், நம் சொந்த வாழ்க்கை நிகழ்வுகளில் கடவுளின் குரலைக் கேட்டு, அவரின் ஆவியின் ஆற்றலால் வழிநடத்தபட விட்டுக்கொடுத்து வாழ்வதே இயேசுவின் ஆன்மீகத்தை நாமும் வாழும் பாங்காகும். **இயேசுவின் பாதத்தில் அமர்ந்த பெண்ணின் துணிவும், மரத்திலேறி இயேசுவைப் பார்க்க விரும்பிய சக்கேயுவின் ஆர்வமும், இயேசுவின் மேலாடையைத் தொட்ட பெண்ணின் நம்பிக்கையும், கனானேயப் பெண்ணைப் போலவும், சமாரியப் பெண்ணைப் போலவும் இயேசுவுடன் உரையாடும் ஆற்றலும், என இயேசுவால் வாழ்வு பெற்ற பலரது மனப்பாங்குகள் நம்மிலும் வளர்ந்தால், நாமும் இயேசுவைப் பின்சென்றால் 'இயேசுவின் ஆன்மீகம்' நம்மையும் வாழவைக்கும் ஆற்றலாகும்.**

**பெண்கள் ஆடை தைக்கும் தொழிற்சாலை தேவை**

பெண்கள் ஆடை தைக்கும் சிறிய தொழிற்சாலை தேவை - வத்தளையில் இருந்து கட்டுநாயகபகுதி வரைக்கும். 18-24 Pls / Per design / உயர்தரத்தில் தைக்கும் திறமை உள்ள சிறிய தொழிற்சாலையாக இருக்கவேண்டும்.

**தொடர்புகளுக்கு : 0716323662** (64512)



**மணமகன் தேவை**

கொழும்பு மாவட்டம் 1996இல் பிறந்த அடி 5' 3" உயரம் உயர்தர கல்வி சித்தியடைந்து, வீடு இருக்கும் கத்தோலிக்க மகளுக்கு தொழில் உள்ள துணையாளரை பெற்றோர்கள் தேடுகிறார்கள்.

**தொடர்புகளுக்கு : 077 – 1257426, 0777 – 102925** (64591)

## 10 விவிலிய வினா விடை


198. பர்த்திமேயு (10:46)
199. தாவீதின் மகனே! எனக்கு இரங்கும் (10:48)
200. இயேசு பார்வை கொடுக்க வேண்டும் என்று விரும்பினான். (10:51)
201. ரபூனி (10:51)
202. பெத்செபா, பெத்தானியா (11:01)
203. இரண்டு (11:1-2)
204. கழுதை (11:4)
205. விடுவித்தருளும் மற்றும் வாழ்த்தை தெரிவிக்கும்சொல் (11:9 அடிக்குறிப்பு)
206. ஓசான்னா (10:46)
207. இயேசு (11:4)

"வாருங்கள் யாத்திரையாக கர்த்தர் ஆலயம் செல்வோம், கர்த்தரின் ஆசீரைப் பெறுவோம்"

# பரப்புக்கடந்தான் கர்த்தர் திருத்தல திருவிழா

திருவிழா திருப்பலி 03.04.2020 காலை 7.30 மணிக்கு

மேதகு ஆயர் பெடலிஸ் லயன்ஸ் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் உயர்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.



தவக்காலத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 5.30ற்கு திருச்சிலுவைப்பாதையும் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

சித்திரை 2ந் திகதி மாலை 5.00 மணிக்கு சிறப்பு திருச்சிலுவைப்பாதையும் அதனைத் தொடர்ந்து மாலை ஆராதனை வழிபாடும் நடைபெறும்.

அருட்பணி. சத்தியராஜ், பங்குத்தந்தை

## திருவிழா திருப்பலிகள் (03.04.2020)

| | | |
|---|---|---|
| காலை 7.30 | - | திருவிழா திருப்பலி |
| காலை 10.00 மணி | - | இரண்டாம் திருப்பலி |
| நண்பகல் 12.00 மணி | - | மூன்றாம் திருப்பலி |
| மாலை 6.00 மணி | - | நான்காம் திருப்பலி |

(64597)

# மனமாற்றத்துக்கான தவக்கால சிறப்புத் தியானம்

**வழிநடத்துபவர் : அருள்முனைவர் அடைக்கலசாமி (Rev. Dr. Adaikalasamy)**

ஆன்மீக இயக்குனர், உயிர்த்த இயேசு சமூக மன்றம், கும்பகோணம், மறைமாவட்டம், தமிழ்நாடு, தென் இந்தியா

## 2020 மார்ச் (பங்குனி)

**புனித லோறன்ஸ் ஆலயம், வெள்ளவத்தை**

28 சனி, 30 திங்கள் (மாலை 6.00 மணி முதல் - இரவு 9.30 வரை)

29 ஞாயிறு, (காலை 10.30 மணி முதல் - நண்பகல் 01.15 வரை)

**திரு இருதய ஆலயம், ராஜகிரிய**

25 புதன், 26 வியாழன்

(மாலை 6.00 மணி முதல் - இரவு 9.30 வரை)

**புனித அந்தோனியார் ஆலயம், தெமட்டக்கொட**

29 ஞாயிறு, (மாலை 05.00 மணி முதல் - இரவு 7.30 வரை)

உண்மையான மனமாற்றத்துடன் இறை ஆசீர் பெற அனைவரும் வருக!

தொடர்புகளுக்கு :
Shalom Renewal Voice Ministries : 0755265437

(64524)

அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

CMYK

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்



## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் [ஓப்செட் முறையில்]
- நவீன பிரதியாக்கம் [டுப்ளோ],
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

**தொடர்புகொள்ளுங்கள்**

இயக்குனர் அருட்தந்தை, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த பிரதீபய மாவத்தை கொழும்பு – 08.

தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586

E-mail : cgnanaoli@yahoo.com / www.colomboarchdiocesancatholicpress.com



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்